# அனாதைப் பிள்ளைகளுக்கு 3 மாடிக் கட்டட ஆச்சிரமம்!

## $1\frac{1}{4}$ லட்சம் ரூபா செலவில் மந்திகையில் அமையும்


Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU


National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 145
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆனி 22 ஜமா. அவ் 1 திங்கட்கிழமை [6-7-70]







பருத்தித்துறை, ஞாயிறு
அனாதைப் பிள்ளைகளுக்கென ஆச்சிரமம் ஒன்று மந்திகையில் அமைக்கப் படவிருக்கிறது. இதற்கான திட்டங்கள் யாவும் பூர்த்தியாகிவிட்டன.

மந்திகைக்கு அண்மையில் மடத்துப் பிள்ளையார்கோவிலடியில் ஒதுக்கப்பட்டுள்ள 16 பரப்புக்காணியில் 3 மாடிக் கட்டிடங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

ஒன்றே கால் லட்சம் ரூபா செலவில் ஆச்சிரம் அமைக்கப்படும் என்றும், இலங்கையிலுள்ள அனாதைப் பிள்ளைகள் இன, மத, வேறுபாடின்றி இதில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் செயற்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதுபோன்ற நிறுவனம் யாழ்ப்பாணத்திலேயே ஒரு தனித்தன்மைவாய்ந்ததென்று இவ்வித தர்மஸ்தாபனத்தை வெற்றிகரமாக இயக்குவதில் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டியது அவசிய மென்றும் செயற்குழு உறுப்பினர் பருத்தித்துறை நீதிபதி திரு கே. விக்னராசா விடுத்த வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

செயற்குழு திரு. கே. விக்னராசா தலைமையில் நேற்று முன்தினம் கூடிய போது மறைந்த கூட்டுறவு உதவியாணையாளரும் கூட்டுறவுக் கல்லூரி விரிவுரையாளரும் நெல்லியடிப்பட்டின சபை முன்னாள் தலைவருமான திரு வீ. எஸ். பொன்னையாவின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

## மாவை ஆலயப் பிரவேசம்

# கொழும்புக்கு வரும்படி பொலிஸ் அதிகாரிக்கு அவசர அழைப்பு

## ஐ.ஜி.பி.யை இன்று 'சுந்தரர்' சந்திப்பார்

யாழ்ப்பாணம், திங்கள்
மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் பிரச்னை சம்பந்தமாக முக்கிய ஆலோசனை நடத்துவதற்காக வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர் சுந்தரலிங்கம் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியினால் அவசரமாக அழைக்கப்பட்டிருக்கிறார் திரு. சுந்தரலிங்கம் நேற்று நண்பகல் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இதே சமயம் மாவிட்டபுரம் ஆலய தர்மகத்தாவும் திரு. ஸி. சுந்தரலிங்கமும் இன்று பொலிஸ் [illegible]

[illegible] தற்கிடையில் திரு. ஸி. சுந்தரலிங்கம் மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் பிரச்னை சம்பந்தமாக வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

இச் சந்திப்பின் போது 19[illegible]ம் ஆண்டுக்கு முன்னர் நடந்தது போல் இம் முறையும் மாவை ஆலயத் திருவிழா நடைபெறவேண்டுமென்றும் அதற்குப் பின் ஒரு திகதியில் ஆலயக் கதவுகள் திறந்து விடப்படுமென் [illegible] தார்.

(1) இம்முறை திருவிழா நடந்து முடிந்தபின் எந்தத் திகதியில் ஆலயக் கதவுகள் அனைவருக்கும் திறக்கப்படுமென்பதை இப்போதே அறிவிக்க வேண்டும்,

(2) திருவிழாவுக்கு முன்னரேயே ஆலயக்கதவுகளைத் திறந்து விடவேண்டும்.

3) வெளியார் எவரும் வராமலேயே மாவிட்டபுரப் பகுதியிலுள்ள ஹரிஜன மக்களை திருவிழாவுக்கு முன்பே ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்க வேண்டும்.

இந்த மூன்று [illegible]

## இன்று

சித்தங்கேணி, திங்கள்
ஈழத்துச்சிதம்பரம் காரை நகர் சிவன்கோவில் பிரதோஷநாயகர் ஊர்வலம் இன்று மாலை நடைபெறுகிறது. பி. ப. 3 மணிக்கு மடத்துக்கரை அம்பாள் கோவிலிலிருந்து சுவாமி ஊர்வலம் புறப்பட்டு, மருதடி விநாயகர் ஆலயத்தையடைந்து, அங்கிருந்து சிவன்கோவில் சென்று விசேஷ பூசைகள் நடைபெறும்.

## இறக்குமதி லைசென்சுகள் ரத்து

கொழும்பு, திங்கள்
இலங்கையில் தற்காலிகமாக வாழும் 15 இந்திய வம்சாவழியினரின் இறக்குமதி லைசென்சுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளது! வர்த்தகம், வியாபாரங்கள் பற்றிய இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகளை இவர்கள் மீறியதே இதற்குரிய காரணமெனச் சொல்லப்படுகிறது.

கைத்தொழில்திட்டங்களை இலங்கையரல்லாதவர்களும் பதிவுசெய்யப்பட்ட பிரஜைகளும் தொடங்கியுள்ளனர். காலவதியான இறக்குமதியாளருடைய லைசென்சுகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

அரசாங்கம் தேயிலைக்குப் பதிலாக பேரிச்சம்பழத்தை இறக்குமதிசெய்யும். கூட்டுறவுமொத்த விற்பனவுஸ்தாபனத்திடமும் தனியாரிடமும் முக்கியமாக இந்திய வம்சாவழியினரிடமும் உள்ள வெங்காயம் மற்றும் இறக்குமதிப்பொருள்களை அரசாங்க வர்த்தக கூட்டுத்தாபனத்தை அமைத்து அதனிடம் முற்றாகக் கையளிப்பதாக அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மூலப்பொருட்களை கைத்தொழிலாளர்கள் தவறான வழியில் பயன்படுத்தாமல் இருக்கவேண்டிய நடவடிக்கை எடுக்குமாறு கைத்தொழில் அமைச்சர், இலங்கை சிறுகைத்தொழிற் சபையைக் கேட்டுள்ளார். [சி பி ஏ]

## சிகானுக்கு தூக்கு!

### அவரில்லாமல் நடந்த விசாரணையில் தீர்ப்பு

நாம்பன், ஜூலை 5
கம்போடிய தலைமைப் பதவியிலிருந்து தள்ளப்பட்ட இளவரசர் சிகானுவுக்கு கம்போடிய இராணுவ நீதிமன்றம் இன்று தூக்குத் தண்டனை விதித்தது! இளவரசர் சிகானுக் இல்லாமலேயே இந்த விசாரணை நடந்தது பீகிங்கில் இருந்து கொண்டே போட்டி அரசு ஒன்றை சிகானுக் நிறுவி செயல்பட்டுவருகிறார்.

ராஜத்துரோகம், ஒரு லட்சம் பேரை கொலைசெய்ததுபோன்ற குற்றச்சாட்டுகள் இவர்மீதுசுமத்தப்பட்டு கடந்த சில தினங்களாக விசாரணை செய்யப்பட்டு வந்தது.

இளவரசரின் சொத்துக்களை பறிமுதல்செய்யும்படியும். அவரது பிரஜாவுரிமையை ரத்துச்செய்யும்படியும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக மானிய

## "உரிமையைப் பாதுகாக்கும் வகையறியாது தமிழ்மக்கள் தவிக்கின்றனர்"

—பண்டிதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தது பீகிங்கில் இருந்து கொண்டே போட்டி அரசு ஒன்றை சிகானுக் நிறுவி செயல்பட்டுவருகிறுர்.

யும். அவரது பிரஜாவுரிமையை ரததுச்செய்யும்படியும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பல்கலைக்கழக மானிய குழு நியமனம்

கொழும்பு, ஞாயிறு

கல்வி அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியின் தலைமையின்கீழ் நாலுபேர் கொண்ட மானியக குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்விச் சபையை மாற்றி பல்கலைக்கழக மானியக்குழுவை உருவாக்குவதற்குரிய சட்டத்தை டாக்டர் பிரேமதாச உடுகம தயாரித்துக்கொண்டிருக்கின்றுர்.

இக்குழுவில் பேராசிரியர் ஜே. ஈ. ஜயசூரியா, டாக்டர் ஒஸ்மன் ஜயரத்தின. டாக்டர் லெஸ்லி குணவர்த்தன சோமசர தசனயக்கா, டொறிக் சூசா, டாக்டர் டபிள்யு. எம். கே. விஜயதுங்கா, டாக்டர் குமாரி ஜயவர்த்தன, டாக்டர் கே. என். வி. அழகியவன்ன ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்

(சி. பி. ஏ.)

# வரணிமகாவித்தியாலயத்தில் பெற்றுர் சத்தியாக்கிரகம்!

## மாணவனை ஆசிரியர் தாக்கினராம்

மட்டுவில், ஞாயிறு

ஆசிரியரின் காலால் உதைக்கப்பட்டதாகக் கூறப்படும் மாணவர் ஒருவர் சாவகச்சேரிஆஸ்பத்திரியிலிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார். வரணி மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து பாடசாலை வாயிலில் பெற்றேர் சத்தியாக்கிரகம் செய்து, ஆசிரியர்களையும், மாணவர்களையும் உள்ளேவிடாது தடுத்துநிறுத்தினர்.

சித்தப்பா செல்வநாயகம் (வயது 14) என்ற 6ம் வகுப்பில் கல்விகற்கும் மாணவன் ஆசிரியர் ஒருவரால் உதைத்து நிலத்தில் வீழ்த்தப்பட்டதாக சாவகச்சேரி பொலிசில் செய்யப்பட்டுள்ள புகாரில் கூறப்பட்டுள்ளது.

செல்வநாயகம் என்ற மாணவன் பொலிசில் செய்துள்ள புகாரில் கூறியுள்ளதாவது:

'சம்பவதினம் இடைவேளை நேரத்தில் நான் பாடசாலை விருந்தையால் நடந்து கொண்டிருந்தபோது, ஆசிரியர் ஒருவர் தனது காலால் என்னை உதைத்தார் நான் சுவருடன் மோதி நிலத்தில் வீழ்ந்தபோது காயம் ஏற்பட்டது'

பெற்றேரின் சத்தியாக்கிரகம் சம்பந்தமாக வடமாநில கல்வி அதிபதிக்கு அவசரமாக அறிவிக்கப்பட்டது. கல்வி ஆலோசகர் திருமதி பாமர், வட்டார வித்தியாதரிசி திரு. கந்தசாமி சாவகச்சேரி எம் பி திரு வி என் நவரத்தினம் ஆகியோர் ஸ்தலத்துக்கு விரைந்துசென்று விசாரணை நடத்தினர். குறிப்பிட்ட ஆசிரியரை உடனடியாக இடமாற்றம் செய்யும்படி பெற்றேர் கோரினர். தகுந்த நடவடிக்கை எடுப்பதாக கல்வி இலாகா அதிகாரிகள் உறுதி கூறியதைத் தொடர்ந்து பெற்றேர் சத்தியாக்கிரகத்தை நிறுத்தினர்.

இதுசம்பந்தமாக கல்வி இலாகா அதிகாரி ஒருவரிடம் விசாரித்தபோது, ஆசிரியர் பகிடிக்கு அடித்தபோது இவ்விதம் ஏற்பட்டுவிட்டதாகவும், அதுபற்றிய விசாரணைகள் நடைபெறுவதாகவும் கூறினர்.

— —

# சம்புரோட்சண கும்பாபிஷேகம்

தொண்டமானுறு, திங்கள்

வருகிற வெள்ளிக்கிழமை தொண்டமானுறு, செல்வச்சந்நிதி கோவிலில் மணவாளக்கோல நாளாகிய ஆனி உத்தரவிழாவை யொட்டி விசேட அபிஷேகங்கள் நடைபெறும். வேலாயுதப் பெருமானுக்கும், அவர்பரிவார மூர்த்திகட்கும் சம்புரோட்சண கும்பாபிடேகமும் இடம் பெறும்.

— —

# இன்று

யாழ்ப்பாணம் கோட்டை முனிஸ்வரன் ஆலய ஸ்நாதனபிஷேகத் ஒட்டி இன்று நடைபெறும் இரண்டாவது திருவிழாவில் திரு. மு. வர்ணகுலசிங்கம் 'அருளானர்' என்னும் தொடரில் (2ம் பகுதி) கதாப்பிரசங்கம் செய்வார்.

...லிங்கம் நேற்று நண்பகல் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றுர்.

இதே சமயம் மாவிட்டபுரம் ஆலய தர்மகத்தாவும் திரு. ஸி. சுந்தரலிங்கமும் இன்று பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலைச் சந்தித்துப் பேசுவதற்காக கொழும்பு போய்ச் சேருகின்றனர்.

...னர் நடந்தது போல் இம்முறையும் மாவை ஆலயத் திருவிழா நடைபெறவேண்டுமென்றும் அதற்குப் பின் ஒரு திகதியில் ஆலயக் கதவுகள் திறந்து விடப்படுமென்றும் திரு. சுந்தரலிங்கம் தெரிவித்தாராம்.

வடபகுதிப் பொலிஸ் அதிபர் அவரிடம் மூன்று யோசனைகளைத் தெரிவித்...

3) வெளியார் எவரும் வராமலேயே மாவிட்டபுரப் பகுதியிலுள்ள ஹரிஜன மக்களை திருவிழாவுக்கு முன்பே ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்க வேண்டும்.

இந்த மூன்று யோசனைகளையும் திரு. ஸி. சுந்தரலிங்கம் நிராகரித்து விட்டாராம்.

# தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக அதற்கு ஆதரவான ஸ்தாபனங்களுடன் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் தொடர்பு கொண்டிருப்பது உண்மைதான் ஆனல் இவ் விஷயம் சம்பந்தமாக இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எவருடனும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. பிறர் கூட்டும் மகாநாடு எதிலும் கலந்து கொள்வதற்குச் சம்மதம் தெரிவிக்கவுமில்லை.

இவ்வாறு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் திரு எஸ். ரி. என். நாகரத்தினம் நேற்றுத்தெரிவித்தார்.

காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைமர், மாவிட்டபுரம் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக இன்று பட்டினசபை மண்டபத்தில் மகாநாடு கூட்ட விருப்பது பற்றி நேற்று வெளிவந்த செய்தி பற்றிக் குறிப்பிடுகையிலேயே திரு. நாகரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'ஆலயவழிபாட்டுரிமையை உணர்ந்து அதை ஆலய நிர்வாகிகள் உரிய காலத்துக்கு முன்னதாகவே ஆலயவழிபாட்டுரிமையை வழங்குவதற்குச் செய்யும் முயற்சிகளை தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் வரவேற்கின்றது.

ஆலயத் திருவிழாவை முன்புபோல் நடத்துவது பற்றியோ, சட்ட நுணுக்கங்கள் பற்றியோ ஆலயப் பிரவேசத்தைப் பின்தள்ளச் செய்யும் எந்த முயற்சியையும் நாங்கள் உறுதியாக எதிர்க்கிறேம்,

சமாதானத்தையும் ஒற்றுமையையும் விரும்பும்பெருந்தொகையான மக்கள் ஆலய வழிபாட்டுரிமைக்கு ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்குகின்றனர் இந்த நல்லெண்ணத்துக்கும் பெருவிருப்பத்துக்கும் எதிரான முறையில் செயல்படக்கூடிய எந்த ஒரு முயற்சியையும் எவரொருவர் மேற்கொண்டாலும் அந்த தீய முயற்சிகளை பொதுமக்கள் முறியடிப்பார்களென்பதில் எங்களுக்குப் பூரண நம்பிக்கையுண்டு. முன்னெப்பொழுதையும்விட பொதுமக்களின் ஆதரவு இதற்குப் பெருமளவிலிருக்கிறதென்பதற்கு வடமாராட்சிப் பகுதியில் தாமாகவே கடைகளைத் திறந்துவிட்டதே சான்று. இந்த நிலையில் மாவிட்டபுரம் கொடியேற்றத் திருவிழாவன்று வழிபாட்டுரிமையை நிலைநாட்டும் பொருட்டு ஆலயத்துக்கு வழிபடச் செல்வார்கள். முகாமையாளர் தாங்களாகவே ஆலயக்கதவுகளைத் திறந்துவிடுவதற்கு இப்போதும் காலம் கடந்துவிடவில்லை'' என்று திரு. நாகரத்தினம் தெரிவித்தார்.

# பசிக்கொடுமை! பிள்ளைகளுடன் ரயில் முன் பாய்ந்தார் தாய்!!

யாழ்ப்பாணம், திங்கள்

இருதடவை திருமணம் செய்து, இரண்டு கணவர்களையும் இழந்த 44 வயது பெண்ணொருவர் தனது இரு குழந்தைகளின் பசிக்கொடுமையைத் தாங்கமுடியாமல் உயிரை மாய்க்க பிள்ளைகளுடன் ரயில் முன் பாய்ந்த சம்பவம் ஒன்று நேற்று நடைபெற்றது.

கோண்டாவில் ரயில்நிலையத்துக்குஅண்மையில் நடைபெற்ற இச்சம்பவம் சம்பந்தமாக மூவர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். ரயில் சாரதி ரயிலை நிறுத்தி மூவரின் உயிரையும் காப்பாற்றினர்,

கோண்டாவிலைச் சேர்ந்த வீரப்பர் செல்லம்மா ருக்குமணிதேவி (வயது 8), சுப்பையா (வயது 3), ஆகிய மூவரும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

'பிள்ளைகள் பசியால் வாடினர். அதை என்னல் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இதனல் தற்கொலை செய்ய எண்ணி ரயில் முன் பாய்ந்தேன்'' என்று பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்தில் செல்லம்மா என்ற தாய் கூறியுள்ளார்.

இருபிள்ளைகளைக் கொலை செய்து தாமும் தற்கொலை செய்ய முயற்சித்ததாக பொலிசார் இவர்மீது வழக்குத் தொடருவர்.

# சுகததாசா மீது கெனமன் தலைமையில் விசாரணை!

## தேர்வு செயற்குழு நேற்று நியமனம்!

கோட்டை, ஞாயிறு

முன்னைய அரசாங்கத்தின் தேசியசேவை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாசாவின் 'கொடுக்கல் வாங்கல்' சம்பந்தமாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு பிரதிநிதிகள் சபை குழுவொன்று வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் தலைமையில் நேற்று நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவுக்கான பிரேரணையைக் கொண்டு வந்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசுகையில், இதனைத் தாம் எதிர்க்கவில்லையென்றும், தமது அரசு இது சம்பந்தமாக ஒரு குழுவை அமைத்து, பதினன்கு மாதங்களாக விசாரணை நடத்தியிருக்கிறது ன்ருர்.

சுயேச்சை அங்கத்தவர் திரு. முதியான்சே தென்னக்கூன் அப்போது, அப்படியானல் ஏன் அதுபற்றி அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை? என்றுகேட்டார்.

# "உரிமையைப் பாதுகாக்கும் வகையறியாது தமிழ்மக்கள் தவிக்கின்றனர்"

—பண்டிதர்

மாவிட்டபுரம், ஞாயிறு

தமிழ்ப் பகுதிகளில் நீதிமன்ற மொழியாகச் சிங்களம் ஆக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் அதை ஒருபோதும் ஏற்கமுடியாது. ஆகவே தொடர்ந்தும் தமிழ்மொழியே இடம்பெற வேண்டுமானல் போராட்டங்கள் செய்யவேண்டும், இதற்கு தமிழ்மக்கள் பூரண ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்''

இவ்வாறு காங்கேசன்துறைப் பட்டினசபை முன்றலில் நேற்று நடைபெற்ற தமிழரசுக்கட்சி எழுச்சி விழாவில் உரையாற்றிய காங்கேசன்துறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினர்.

திரு. மு. ஆலாலசுந்தரம் தலைமையில் கூட்டம் நடந்தது.

சிம்மாசனப் பிரசங்கவிவாதத்தின்போது தமிழ் மக்களின் ஒரே கட்சியாக விளங்கும் தமிழரசுக் கட்சி மூன்று திருத்தப் பிரேரணைகளைக் கொண்டுவந்தது. அதில் குறிப்பாக போதன மொழியையும் நீதிமன்ற மொழியையும் எதிர்த்தமை தமிழ் மக்களுக்கு துரோகம் செய்ததற்குச் சமமாகும்.

நீதி மந்திரி சிங்கள மக்...

(4-ம் பக்கம் பார்க்க)

# 100 பேருக்குக் காணி

பூநகரி, ஞாயிறு

பூநகரி கரியாலைநாகபடுவான் குடியேற்றத் திட்டத்தின்கீழ் புதிதாக 100 பேருக்குக் காணி வழங்கப்பட்டுள்ளது. இதில் படித்த வாலிபர்களுக்கும் விவசாயப் பயிற்சி பெற்றவர்களுக்கும் முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்குரிய காணிக் கச்சேரி அண்மையில் மாவட்டக் காணி உத்தியோகத்தரால் நடத்தப்பட்டது.

# விவசாயிகளுக்கு 'டிராக்டர்' வசதி

கோட்டை, ஞாயிறு

டிராக்டர்கள் வைத்திருக்கும் தனிப்பட்ட நபர்கள் அதிக கட்டணம் அறவிடுவதின்மூலம் விவசாயிகளைச் சுரண்டுவதிலிருந்து பாதுகாப்பளிக்கும் வகையில் தேர்தல் தொகுதிகள் தோறும் மத்திய டிராக்டர் நிலையங்களை நிறுவுவதென்றுவிவசாய அமைச்சர் ஹெக்டர் கொப்பகடுவ தீர்மானித்திருக்கின்றுர்.

தனிப்பட்ட டிராக்டர் சொந்தக்காரர்கள் விசசாய காரியங்களுக்கு விவசாயிகளிடம் 80 ரூபாய் முதற்கொண்டு 120வரை அறவிடுகிறுர்களென்றும் இதனல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறுர்கள் என்றும் அமைச்சரிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது:

ஒரு ஏக்கர் இருஏக்கர் நிலம் அல்லது சிறு வயல் வைத்திருக்கும் விவசாயிகள் டிராக்டர் வைத்து வயஉ.

(4-ம் பக்கம் பார்க்க)

# 5 பிள்ளைகளின் தந்தை மரணத்தில் சந்தேகம்

மாவிட்டபுரம், ஞாயிறு

5 பிள்ளைகளின் தந்தையின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து இறந்தவரின் உடல் உறுப்புகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

தாவடிவடக்கைச் சேர்ந்த தம்பு இரத்தினம் என்ற 47 வயதுள்ள 5 பிள்ளைகளின் தந்தையின் மரணத்திலேயே இவ்வித சந்தேகம் எழுந்துள்ளது.

பிரஸ்தாப நபர் தமது தோட்டத்துக்குச் சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்து தான் எண்ணெய் தேய்த்து முழுகப் போவதாயும் முடக்கொத்தான் இரசம் வைத்து தரும்படியும் கூறி, சாராயம் குடித்துவிட்டு முழுகினர். பிள்ளைகளுக்கு சாப்பாடு கொடுத்து தானும் சாப்பிட்டுவிட்டு இருந்த சமயம் திடீரென மயக்கமுற்று மரணமானர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப நபரின் மரணம் சம்பந்தமாகத் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. இ. பாலசுப்பிரமணியம் விசாரணை நடத்தினர்.

இம்மரணம் குறித்து டாக்டர் திரு. மாணிக்கம் பிரேத பரிசோதனை நடத்திய பின் உடலில் நஞ்சு இருப்பதாகத் தெரிவித்தார்.

இதையடுத்து மரணவிசாரணை அதிகாரி பிரஸ்தாப மரணத்தில் மர்மம் இருப்பதாகக் கருதி ரசாயன பரிசோதனைக்காக உடல் உறுப்புக்களை கொழும்புக்கு அனுப்பும்படி உத்தரவிட்டார்.

இம்மர்ம மரணத்தின் துப்பைத் துலக்க சுன்னகம் பொலிஸ் சார்ஜன்ட் பி. எம். ஏ. பொன்னுத்துரை தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

# சிங்களத்தில் வேலை செய்க!

—அமைச்சர்

கொழும்பு, ஞாயிறு

தனது அமைச்சின்கீழுள்ள திணைக்களங்கள், கூட்டுஸ்தாபனங்களில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கெதியில் சிங்கள மொழியில் மட்டும் வேலைகளைச் செய்யுமாறு நீர்ப்பாசன, மின்சாரநெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஆணையிட்டுள்ளார்.

(சி பி. ஏ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

திறமைவாய்ந்த பெண் கன்வெஸர்கள் தேவை திறமைக்கேற்ப கமிஷன் வழங்கப்படும். நேரில் விண்ணப்பிக்கவும். மனேஜர், M. S. T. (சங்கரப்பிள்ளை கட்டிடம்), 95/3, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 3148

அனுபவம் வாய்ந்த ரெக்ஸ்ரைல் பிறின்டேர்ஸ், டை மிக்ஷேர்ஸ், ஸ்கிறீன் மேக்கர்ஸ், ஆட்டிஸ்ற் ஆகியோர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல. 3155, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 3155

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான கராஜ் ஒன்றிற்கு திறமையுள்ள மெக்கானிக்கும் டிங்கரும் தேவை. விண்ணப்பிக்கவும் விளம்பர இல 3156, C/o 'ஈழநாடு' லிமிட்டெட், யாழ்ப்பாணம். 3156

முகாமையாளர்:

வவுனியா மாவட்டத்தில் இருக்கும் விவசாய பண்ணைக்கு முகாமையாளர் தேவை. விவசாயத்திலும் நிர்வாகத்திலும் போதிய பயிற்சி அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். அரசினர் சேவையிலிருந்து இளைப்பாறியவர் விரும்பத்தக்கது. தகுதிக்கேற்ற சம்பளம் நேரில் பேசிக் கொள்ளலாம். விளம்பர இல:3152, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம், 3152

## விற்பனைக்கு

எழுதுமட்டுவாளுக்கும், பளைக்குமிடையே உள்ள 236 ஏக்கர் தென்னந்தோட்டக் காணி சில பகுதி தென்னையுடையது- (முடிக்குரிய உறுதி) மூன்று துண்டுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இராசரத்தினம் பிரக்டர், 60, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். 3151

நெல்வயல் 15 ஏக்கர். பூநகரி, நல்லூரை அடுத்த தியாகம என்னும் கமம். நியாயமான விலைக்கு விற்கப்படும். விபரங்களுக்கு சு. தர்மலிங்கம், இல. 81, மாக்கற், பெரியகடை, யாழ்ப்பாணம். 2165

பூநகரி வேரவிலில் நெற்சாணி 70 பரப்பு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நேரில் வரவும். நா. சரவணமுத்து, தேநீர்க் கடை, பல்லவராயன்கட்டு 3154

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல. 1646 / Misc.

## யாழ்ப்பாணம் ஐக்கிய இலாபநிதி கம். (லிமிட்)

### கணக்குத் தீர்த்தல் கலைத்தல்

மேறபடி கம்பனியில் கலைப்பாளராகிய யாழ்ப்பாணம், ஸ்ரான்லி ரோட், 147-ம் இலக்கத்தில் முதலாம் மாடியில் உள்ள திரு. பொன்னம்பலம் சண்முகரத்தினத்திற்கு மேற்கூறப்பட்ட கம்பனியிடமிருந்து பற்று உடையவர்கள், தங்கள், பெயர்கள், விலாசங்கள் அவரவர்க்கு வரவேண்டிய தொகைகள் ஆகிய விபரங்களை 1970 ஆகஸ்ட் 10-ந் திகதியன்று அல்லது அதற்கு முன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேற்குறிப்பிட்டுள்ள கலைப்பாளர் சம்பந்தப்பட்டவர்களை ஒரு குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில்வந்து தங்கள் கோரிக்கைகளை நிரூபிக்கும்படி எழுத்து மூலம் அறிவித்தல் கொடுத்தால் அவ்வாறு நிரூபிக்க வேண்டும். அல்லது அதனின்று தவறின் கம்பனியின் ஆஸ்திகள் பிரிக்கப்படும்போது அவற்றைப் பெறுவதிலிருந்து அவர்கள் தவிர்க்கப்படக்கூடும். யாழ்ப்பாணம் ஐக்கிய இலாபநிதி கம். லிமிட்டெட்டுக்கு பணம் கொடுக்க வேண்டிய எல்லா நபர்களும் அல்லது அதற்குச் சேர வேண்டிய சொத்துக்களை வைத்திருப்பவர்களும் அந்தப் பணங்களையும் அப்படிப்பட்ட சொத்துக்களையும் உடனடியாக ஒப்படைக்கும்படி இத்தால் அறிவிக்கப்படுகிறது

பி. சண்முகரத்தினம்,
கலைப்பாளர்.

யாழ்ப்பாணம்,
1970 ஜூலை 1ந் திகதி.

2347


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30,10-00

பிரிபோயா,போயா 2-30மணி

எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா

நடித்த

சந்திரோதயம்


## தேவை

### கணக்கு இலிகிதர்

தராதரங்கள்: G. C. E. (சாதாரணம்) ஆங்கிலம், கணிதம் அல்லது தூயகணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி — வயது 25 முதல் 35வரை கணக்கீடுவேலைகளில் குறைந்தது 2 வருட அனுபவம்- தமிழ்/ஆங்கில தட்டச்சு வேலைகளில் அனுபவம் மேலதிக தராதரமாகக் கணிக்கப்படும். மாதாந்த வேதனம் சகல படிகளுமுட்பட ரூபா 150/-.

### தட்டச்சு இலிகிதர்

தராதரங்கள்: G. C. E. (சாதாரணம்) ஆங்கிலம், கணிதம் அல்லது தூயகணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி. வயது 25 முதல் 35 வரை. தமிழ்/ஆங்கில தட்டச்சு வேலைகளில் குறைந்தது 2 வருட அனுபவம் கணக்கீடு வேலைகளில் அனுபவம் மேலதிக தராதரமாகக் கணிக்கப்படும்.

மாதாந்த வேதனம் சகல படிகளுமுட்பட ரூபா 125/-

விண்ணப்ப முடிவு திகதி 15-7-1970

பண்டத்தரிப்புக்
கோவிற்பற்று
ப நோ. கூ. ச.
சமாசம்

பண்டத்தரிப்பு.

2346

## பொற் தொழிலாளா சங்கம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை பொற் தொழிலாளர் சங்க பொதுக் கூட்டம் அதன் தலைவர் திரு. பொ. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது,

புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: பொ. இராமச்சந்திரன், உபதலைவர்: பொ. நாகரத்தினம், இணைக்காரியதரிசிகள்: க. செல்வராசா இ. அமிர்தலிங்கம், கணகி

**ORDER NISI**
**IN THE DISTRICT COURT OF JAFFNA**

No. Testy 2597

In the matter of the Last Will and Testament of the late Sultan Mohideen Mohamed Meeran Sahib of Moor Street, Jaffna.

Deceased.

Sultan Mohideen Kachchu Mohamed of No 27, Kamal Lane Vannarponnai West Jaffna

Petitioner

vs

1. Suhootha Ummah widow of Sultan Mohideen Mohamed Meeran Sahib of No. 4, M O. Lane, Vannarponnai West, Jaffna.
2. Pathumuthu, widow of S M. Mohamed Meeran Sahib of No. 117, Manipay Road. Vannarponnai West, Jaffna.

Minors

3. Meeran Sahib Jafeer of 117, Manipay Road, Vannarponnai W, Jaffna
4. Meeran Sahib Subair of 117, Manipay Road, Vannarponnai W, Jaffna.
5. Kabeeba daughter of Meeran Sahib of 117, Manipay. Road, Vannarponnai W. Jaffna
6. Meeran Sahib Lafeer of 117, Manipay Road. Vannarponnai W, Jaffna.
7. Jazeeka daughter of Meeran Sahib of 117, Manipay Road, Vannarponnai W. Jaffna.

Respondents.

This matter coming on for disposal before I. M. Ismail, Esquire, District Judge, Jaffna on the 30th day of April, 1970 in the presence of Mr C. C. Somasegaram, Proctor on the part of the petitioner and the affidavit of the Petitioner dated 26th April, 1970 and the affidavit of the five witnesses dated 6th March, 1970 having been read

It is Ordered that the 2nd Respondent be and she is hereby appointed as Guardian-ad-litem over the minors the [illegible]d to 7th Respondents above named for the purpose of watching their interest in these proceedings

It is further Ordered that the Last Will of the above na[illegible]d deceased dated 11th December, 1968 and now

நெல்லியடி ம. ம. வி.

## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, ஞாயிறு

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வருடாந்த விளையாட்டு விழா கல்லூரி அதிபர் திரு. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றது. பாரதி இல்லம் 214 புள்ளிகளைப் பெற்று இல்லச்சாம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டது. கம்பன் இல்லம் 203 புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தையும் இளங்கோ இல்லம் 170 புள்ளிகளைப்பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இல்ல வீராங்கனைகளாகத் தெரிவுசெய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

(19 வயதுக்குள்) கே. தவகுருதேவி, (16 வயதுக்குள்) வீ. இளந்தேவி, (14 வயதுக்குள்) என். கமலராணி பீ கமலாம்பிகை.

சிறந்தவிளையாட்டு வீரர்கள் வருமாறு: (19 வயதுக்குள்) ஏ. நாகேந்திரன், (17 வயதுக்குள்) என். சிவபாதம், (16 வயதுக்குள்) கே. மகேந்திரராசா, (15 வயதுக்குள்) ஐ. இரவீந்திரநாதன், (14 வயதுக்குள்) எஸ். சிவபாதம், (13வயதுக்குள்) கே. கிருஷ்ணகுமார்

அஞ்சலோட்டச் சாம்பியன்கள்— கம்பன் இல்லம், பாரதி இல்லம், இளங்கோ இல்லம்.

### தேவரையாளி இந்துக்கல்லூரி முடிவுகள்

உடுப்பிட்டி, சனி

வதிரிதேவரையாளி இந்துக்கல்லூரி இல்லங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப்போட்டி அதிபர் திரு எம். எஸ். சீனித்தம்பி தலைமையில் நடைபெற்றது. உடுப்பிட்டிக் காரியாதிகாரி திரு. எஸ் ஜெயகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மஞ்சள் (வள்ளுவர்) இல்லம் 184 புள்ளிகளைப்பெற்று இவ்வருட கல்லூரிச் சாம்பியனுகியது சிவப்பு(பாரதி) இல்லம் 175 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தையும், பச்சை (காந்தி) இல்லம் 124 புள்ளிகள் பெற்று மூன்றுமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

பிரிவுச் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

13 வயதுக்குள் (பெண்) கே. லோகராணி, (ஆண்) வீ, செல்வராசா, 15 வயதுக்குள் (ஆண்) பீ. பொன்ராஜா. 16 வயதுக்குள் (பெண்) எம். தவமணி, 19 வயதுக்குள் (ஆண்) என். லோகராஜன், என், வேலழகன்

ஆசிரியர்-மாணவர் கயிறு இழுத்தல் போட்டியில் ஆசிரியர் வெற்றி ஈட்டினர். வயதுவந்தோருக்கான ஓட்டப்பந்தயத்தில் திரு. எம். தர்மரத்தினம் முதலிடத்தைத் தட்டிக்கொண்டார்.

## 'உலக ஒருமைப்பாட்டுக்கு விளையாட்டு உதவுகிறது'

வேலணை, ஞாயிறு

தோல்வியடைந்தவர்கள் மனச் சோர்வடையாமல் மறுமுறை வெற்றி தமக்கென்ற மன உறுதியுடன் மீண்டும்மீண்டும் விளையாட்டுக்களில் பங்குபற்றுதல் வேண்டும். விவேகத்தையும் உடல் வலிமையையும் விளையாட்டு அளிக்கிறது.

சமூகப் பூசல்களை மறந்து மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டுமாயின் விளையாட்டுக்கள் அடிக்கடி நடைபெறுதல் வேண்டும். வெவ்வேறு பகுதி மக்கள் [illegible] சேரும் சந்தர்ப்பம் விளையாட்டுப்போட்டி மூலம்ஏற்படுகிறது. இதன்மூலம் முழு உலக மக்களும் ஒன்றுபடும் நிலையும் ஏற்படுகிறது' என வேலணை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் [illegible] கங்கள் ஏற்படுத்துகின்றன எனக் கூறினர். பகுதிக்காரியாதிகாரி திரு. விநாயகலிங்கம், வேலணை மத்தியமகா வித்தியாலய அதிபர் திரு அரியரத்தினம் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர்.

## இன்றைய பலன்

ஆனி மாதம்22-ம் திகதி
[6-7-70]

மேஷம்: கற்றதனுல்பயன் இன்று கட்டாயம் கிட்டும். அறிஞர்கள் போற்றுவர்.

ரிஷிபம்: வரவில் உயர்வு காணும். அயலவர்களின் வாழ்த்தும்அவசியம் கிடை






சினிமா விமர்சனம்

## மாவீரன் ஜெயசீலன்

மந்திர ஜால, மாயாஜால வித்தைகள், ஆடல், பாடல் கத்திச்சண்டை, குஸ்தி இத்தனையோடு காதலுமுண்டு! எங்கே யென்று ஆவலுடன் கேட்கிறீர்களா?

யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரில் தான் இத்தனையும் இப்போது கண்ணுக்கு விருந்தளிக்கிறது.

பழைய ராஜா ராணிக் கதைதான், அதிகாரத்திமிர் நீடிக்காதென்பதையும் கணவன் கிழவனுக இருந்தாலென்ன குரூபியாக இருந்தாலென்ன கடவுள் தந்த கணவனுக்குப் பணிசெய்வதே பத்தினிப்பெண்ணின் பண்பு என்பதையும் அடிப்படையாகக்கொண்ட கதை 'மாவீரன் ஜெயசீலன்'

காந்தராவ் 'மாவீரன் ஜெயசீலனு'கவும் ராஜ்ஸ்ரீ அவன் காதலி அமிர்தவல்லியாகவும் நடிக்கின்றனர். குளுகுளுத் தோற்றத்திலும் கொஞ்சும் மொழியிலும் நல்ல நடிப்பினுலும் ரசிகர்களைக் கவர்கிறார் ராஜ்ஸ்ரீ, காந்தராவ், ராஜ்நளா கத்திச்சண்டையிலும் குத்துச்சண்டை ரசிகர்களை ஆசனத்தின் நுனியிலிருந்து பார்க்கச் செய்கின்றனர். ஜெயந்தி, விஜயலலிதா, ஜோதிலட்சுமி ஆகியோரும் தங்கள் பாத்திரத்தை உணர்ந்து நடித்துள்ளனர்.

பிறமொழிப் படமென்பது தெரியாதவகையில் சிறப்பாக 'டப்' செய்யப்பட்டிருக்கிறது.

தந்திரக் காட்சிகள் நல்ல முறையில் எடுக்கப்பட்டிருக்கின்றன

சில மணி நேரம் வேறு பிரச்னைகளை மறந்து, கண்ணுக்குக் குளிர்ச்சியாகப் பார்த்து மகிழக்கூடிய படம் 'மாவீரன் ஜெயசீலன்'

—திரைவண்டு

## வியாபாரிமூலை ஸ்ரீ.ல.சு.க. கிளை

பருத்தித்துறை, ஞாயிறு

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வியாபாரி மூலைக் கிளையின் உத்தியோகத்தர் தெரிவு நேற்று முன்தினம் நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு ச. தம்பித்

## தொலைபேசி வசதிதருக

நல்லூர், ஞாயிறு

உரும்பிராய் ஊரெழு பட்டினசபைக்கு உடனடியாக தொலைபேசி அமைத்துக் கொடுக்கும்படி தபால் தகவல் அமைச்சருக்கு கோப்பாய் எம்.பி; திரு கதிரவேலுப்பிள்ளை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

உரும்பராய் பட்டினசபை


## ராஜா - யாழ்ப்பாணம்

தினசரி 3 காட்சிகள் பிரிபோயா, போயா 4 காட்சிகள்


noolaham Foundation | aavanaham.org

பல்லவராயன்கட்டு 3154


## ராஜா - யாழ்ப்பாணம்

தினசரி 3 காட்சிகள் பிரிபோயா, போயா 4 காட்சிகள்

காந்தராவ், ராஜ்ஸ்ரீ, ஜெயந்தி

நடித்த

# மாவீரன் ஜெயசீலன்

(சண்டைகள் நிறைந்த ஒப்பற்ற திரை ஓவியம்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்—ஜெயந்தி நடித்த

# இரு கோடுகள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ரவிச்சந்திரன் - சரோஜாதேவி நாகேஷ், பாலையா நடித்த

# ஓடும் நதி


இப்பொழுது திரையிடப்படுகிறது

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி (போயா பிரிப்போயா காலை 10-30)

எம்.ஜி.ஆர். ஜெயலலிதா நாகேஷ் ரெங்கராவ்

மற்றும் பலர் நடிந்த


தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பொ. இராமச்சந்திரன், உபதலைவர்: பொ. நாகரத்தினம், இணைக்காரியதரிசிகள்: க. செல்வராசா இ. அமிர்தலிங்கம், தனாதிகாரி: க. இராதா, உபதனாதிகாரி: ந. தேவராசா. மற்றும் நிர்வாக சபை உறுப்பினராக 7 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## மா. மு. சங்க புதிய கட்டிடம்

முசலி. ஞாயிறு

முசலிக் காரியாதிகாரி பிரிவில் கொவ்வங்குளம் மாதர் கிராம முன்னேற்றச் சங்க புதியகட்டிடவேலையை பூர்த்தி செய்வதற்கு மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தி மேற்பார்வையாளர் திரு. ரி. இரத்தினசபாபதி முயற்சிசெய்து வருகின்றார்.


## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி 6-30, 9-30 மணி போயா, பிரிபோயா 2-30

எம் ஆர் ராதா — பத்மினி நடித்த

# சித்தி

**REGAL JAFFNA**

Daily 4-45, 7 & 9-45 P.M.

Tony Curins, Henry Fonda in

THE BOSTON STRANGLER (Colour)

**MANOHARA JAFFNA**

Daily 4-45, 7-00 & 9-45 p m.

Poya-Prepoya 10-30 a.m

Tony Cortis, Monica Vitti in

THE CHASTITY BELT (Techni Color) (Adults Only)


above named for the purpose of watching their interest in these proceedings

It is further Ordered that the Last Will of the above named deceased dated *11th* December, *1968* and now deposited in this Court be and the same is hereby declared proved and that the above named Petitioner as the Executor named in the said will be and he is hereby declared entitled to obtain Probate there of and that Probate be issued to him accordingly unless the Respondents r any other person or persons interested in the subject matter of this application shall on or before the *21st* day of July, *1970* at *10* a. m. or soon thereafter show sufficient cause to the satisfacation of this Court to the contrary.

It is further ordered that the said minors be produced in Court on the said date.

This *30th* day of April, *1970*

Sgd/- I. M. Ismail.
District Judge, Jaffna.

Drawn by
Sgd/- C. C. Somasegaram,
Proctor for Petitioner.

2348

## பூநகரியில் கூட்டுறவு தின விழா

பூநகரி, ஞாயிறு

பூநகரிப் பகுதியிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் சமாசமும் சேர்ந்து கூட்டுறவுதின விழாவை கொண்டாடவிருக்கின்றன. இவ்விழா பூநகரி காரியாதிகாரி திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் இம்மாத 8-ம் திகதி பூநகரி ப. நோ. கூ. ச. சமாச முன்றலில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பலர் உரையாற்றுவர். நாடகமும் இடம்பெறும்.

சேரும் சந்தர்ப்பம் விளையாட்டுப்போட்டி மூலம்ஏற்படுகிறது. இதன்மூலம் முழு உலக மக்களும் ஒன்றுபடும் நிலையும் ஏற்படுகிறது' என வேலணை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் நடத்திய விளையாட்டுப் போட்டியின் போதும் பரிசளிப்பு விழாவின்போதும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார்.

வேலணைக் கிராமசபைத் தலைவர் திரு க சதாசிவம் தலைமைவகித்துப் பேசுகையில் உயர்வு, தாழ்வு, பகைமை இவை அனைத்தையும் மறந்து ஒன்றுபட்டு விளையாட்டை ரசிக்கும் நிலையை விளையாட்டுக் கழ

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 6—7—70

(செய்திகள்: காலை 7 00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 சித்திரம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6-00 வயலின், 6-25 பேச்சு, 7-00 திரைகானம், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

மேஷம்: கற்றதனாலபயன் இன்று கட்டாயம் கிட்டும். அறிஞர்கள் போற்றுவர்.

ரிஷிபம்: வரவில் உயர்வு காணும். அயலவர்களின் வாழ்த்தும்அவசியம் கிடைக்கும்,

மிதுனம்: எண்ணங்கள் ஆயிரம் சிந்தையிலே வந்து உந்தும். ஏமாற்றம் தாக்கும்.

கடகம்: நாள் எல்லாம் அலைச்சல். உடலில் நலிவு தோன்றும்.

சிம்மம்: பொருள் வரவு திருப்திகரமாக இருக்கும்.

கன்னி: நினைத்தது நடக்காது. பொருள் தவறக்கூடும் அதிக சிந்தனையைத் தவிர்.

துலாம்: மாதுரு வழிப் பெருமைக்கும் இடமுண்டு. இன்று கல்வியில் சிறப்பும் உண்டு.

விருட்சிகம்: வேண்டியவர்களின் ஆதரவு தாராளமாகக்கிடைக்கும். குடும்பத்திலும் மகிழ்ச்சி உண்டு.

தனுசு: பகை மூட்டம் தோன்றும். மிகையான போக்கினாலே மனதும் பாழாய்ப்போகும்.

மகரம்: உணர்ச்சிவசப் படுவதால் காரியம் தடைப்படலாம் நிதானம் வேண்டும்,

கும்பம்: நண்பர்கள் தொல்லையாலே நலிவுகள் தோன்றக்கூடும்.

மீனம்: இலட்சியப் பாதையில் புதிய முன்னேற்றம் காணப்படும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## மென்பந்தாட்டப் போட்டி

முசலி, ஞாயிறு

மாந்தைக் காரியாதிகாரி பிரிவு மென்பந்தாட்டப் போட்டி இவ்வார இறுதியுடன் முடிவடையும் இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் அடம்பன் சென்; மேரிஸ் விளையாட்டுக் கழகம் மாந்தை

யின் உத்தியோகத்தர் தெரிவு நேற்று முன்தினம் நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு ச. தம்பித்துரை, உபதலைவர் திரு இ. சபாரத்தினம், செயலாளர் திருவாளர்கள் சி. சிவசெல்வம் க. இராசலிங்கம், செ. சிவராசசிங்கம்.

பொருளாளர் திருவாளர்கள் எம் கே. சதாசிவம் வீ. என் கணபதிப்பிள்ளை,

14 பேரைக்கொண்ட ஒரு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது,

## இரசாயன விளையாட்டுக்கழக நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

பரந்தன் இரசாயன விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் தலைவர் திரு. கே. சரவணமுத்துவின் தலைமையில் நடைபெற்ற போது, பின்வருவோர் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

தலைவர்: திரு பி. ஏ. சச்சிதானந்தம், உப-தலைவர்கள்: திருவாளர்கள் கே. ஆறுமுகம், ஆர். கே ரத்தினம், காரியதரிசி: திரு: ஆர். ஜி சிங்கம் தனாதிகாரி: திரு எஸ். சுந்தரலிங்கம், உள் விளையாட்டுக் காரியதரிசி: திரு. ரி. அந்தோனிப்பிள்ளை, டெனிஸ் வி. கா: திரு. பி ஆறுமுகம், உதைபந்தாட்டக் காரியதரிசி: திரு ஏ. பெனடிற், கைப்பந்தாட்டக் காரியதரிசி: திரு. பி. பத்மனாதன், மென்பந்தாட்டக் காரியதரிசி: திரு. எம். சிவலிங்கம், சமூகசேவை காரியதரிசி: திரு. எஸ். தருமநாயகம்

(தே. நி)

திருக்கேதீஸ்வரம் விளையாட்டுக் கழகம், நானாட்டான் அரசாங்க ஊழியர் விளையாட்டுக் கழகம் ஆகியன பங்குபற்றுகின்றன.

கொடுக்கும்படி தபால் தகவல் அமைச்சருக்கு கோப்பாய் எம்.பி; திரு கதிரவேலுப்பிள்ளை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

உடும்பராய் பட்டினசபை அண்மையில் இதுசம்பந்தமாகத் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியது.

## நிர்வாகிகள்

வேலணை, ஞாயிறு

வேலணை செட்டி புலத்தில் அபிவிருத்திச் சபை அமைக்கப்பட்டது. பின்வருவோர் சபை நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. [illegible]காங்கேசு, உபதலைவர்: திரு. கு ராமையா செயலாளர்: திரு. ஆ இராமநாதன், உபசெயலாளர்: திரு. ஆ மயில்வாகனம், தனாதிகாரி: திரு. செ. தங்கவடிவேல்.

மற்றும் 13 பேர்களடங்கிய நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.


## பிள்ளைப் பேற்றில் சுதந்திரமும் சமத்துவமும்!

முக்கிய குறிப்பு:

உங்களைச் சுற்றி வாழும் வசதி உள்ளவர்களின் குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் வயது வித்தியாசங்களைக் கவனியுங்கள்.

**ஏன் கட்டணம் செலுத்துகிறீர்கள்?**

இலங்கை குடும்பத்திட்டச் சங்கம் இதற்கானவசதியை உங்களுக்கு அளிக்கிறது.

**இலவசம்!**

குடும்பத்திட்டம் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறவர்களுக்கு இச்சேவை இலவசமாக வழங்கப்படும். வசதி உள்ளவர்களைப்போல நீங்களும் உங்கள் குழந்தைகளுக்கு வாழ்வில் சமசந்தர்ப்பம் அளியுங்கள்,

**ஆலோசனைகள்**

சகல அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் குடும்பத்திட்டசிகிச்சைநிலையங்கள் இயங்குகின்றன. தகவல்களுக்கு:-

குடும்பத்திட்டசங்க தலைமைக் காரியாலயம்
23/5, ஹோர்டன் பிளேஸ்
கொழும்பு-7.
தொலைபேசி: 92354

அல்லது

தகவல் நிலையம்,
457 காலி வீதி.
கொழும்பு-3
தொலைபேசி: 85189.

$6\frac{1}{2}$ ஹோஸ் பவர் தொடக்கம் 20 ஹோஸ் பவர் வரையுமுள்ள

ஜோன்சன் அவுட்போட் மோட்டர் உதிரிப்பாகங்களும்

பேக்கின் B 3 மரீன் இன்ஸின் உதிரிப்பாகங்களும்

எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்

மற்றும் கட்டிடங்களுக்குத் தேவையான சகலவிதமான சாமான்களும் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

# விஷ்ணு ஹாட் வெயர்ஸ்ரோஸ்

57, யாழ்ப்பாணம்வீதி (போன்: 34) வல்வெட்டித்துறை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாஸ்கோவில் நாஸருக்கு சுகவீனம்
## ஆஸ்பத்திரியில் சிகிச்சை

மாஸ்கோ, ஜூலை 5
மாஸ்கோவுக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் நாஸர் சுகவீனமுற்றிருக்கிருர். மாஸ்கோவுக்கு அருகிலுள்ள ஒரு மருத்துவ மனையில் அதிபர் நாஸர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

மேற்காசிய நிலைமைகள் பற்றியும், ஐக்கிய அரபுக் குடியரசுக்கு அதிக ராணுவ உதவிகளைப் பெறுவதற்குமென அதிபர் நாஸர் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்தார், நாஸருடன் வந்த அதிகாரிகள் கோஷ்டி ஏற்கனவே சோவியத் அதிகாரிகளுடன் ஆலோசனைகள் நடத்தியுள்ளது. அதிபர் நாஸர் சோவியத் தலைவர்களை சந்தித்துப் பூர்வாங்கமாகப் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர். ஆனுல் அவருக்கு உடல்நலக் குறைவுஏற்பட்டுவிட்டதால் அவர் சோவியத் தலைவர்களுடன் திங்கட்கிழமை நடத்தவிருந்த பேச்சுக்கள் ஒத்திப்போடப்பட்டுள்ளன.

### பிரஸ்னேவ் சுகவீனம்

இதேசமயம் சோவியத் கம்யூனிஸ்டகட்சி பொதுச் செயலாளர் பிரஸ்னேவுக்கும் சுகவீனம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. திரு. பிரஸ்னேவுக்கு பீனிஸ நோய் கண்டிருப்பதாகவும் அதனுல் அவர் ருமேனியாவுக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிகின்றது.

திரு. பிரஸ்னேவுக்குப் பதிலாக பிரதமர் கொஸிஜின் புச்சாரெஸ்ட்டுக்குப் போவார் என்று தெரிகின்றது.

நேற்று ஐக்கிய அரபு குடியரசு ராணுவ நிலைகள் மீது குண்டுவீசித் தாக்குதல்களை நடத்திய இஸ்ரேலிய விமானங்களில் இரண்டை சுட்டு வீழ்த்திவிட்டதாக எகிப்தியர் அறிவித்தனர். இஸ்ரேலியர் இருதடவைகள் சூயஸ்கால்வாயின் தென்பகுதியில் இந்த விமானத் தாக்குதல்களை நடத்தினுர்கள்.

இஸ்ரேலியரின் வேறு ராணுவ வாகனங்களையும் எகிப்தியர் சின்னபின்னமாக்கியதாக அறிவித்தனர். அரபுத் தரப்பில் இருவர்மட்டுமே காயமடைந்தனராம். தமது தரப்பில் சேதம் எதுவுமில்லையென்று இஸ்ரேலியர் அறிவித்தனர்.

## இஸ்ரேலுக்கு சலுகை

மத்திய கிழக்கில் சமாதானம் காண்பதற்காக ரஷ்யா வகுத்துள்ள ஒரு சமரசத் திட்டத்தில் இஸ்ரேலுக்கு ஒரு பெரிய சலுகை அடங்கியிருப்பதாக ஐ நாவில் விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நான்கு வல்லரசுகளின் தூதர்களிடம் சென்றவாரம் ரஷ்யாவின் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது,

அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுடன் பாதுகாப்பாக இஸ்ரேல் வாழ்வதற்கான உரிமையை அரபு நாடுகள் ஒப்புக்கொள்கின்ற வரையில் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து இஸ்ரேல் தனது படைகளை வாபஸ்பெற வேண்டும் என்று ரஷ்ய திட்டம் வற்புறுத்தவில்லை என்று நம்பப்படுகிறது.

இஸ்ரேலுக்குக் காட்டப்படும் பெரியதொரு சலுகை இதுவென்று கருதப்படுகிறது,

பாலஸ்தீன அகதிகள் பிரச்னைக்குத் தீர்வுகாண்பது பற்றிவும் ரஷ்ய திட்டத்தில் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மத்திய கிழக்கில் நடைபெறும் மோதலில் ரஷ்யாவும், அமெரிக்காவும் இழுக்கப்படக்கூடிய அபாயம் இருப்பதாகவும், இதை ரஷ்யாவும் அமெரிக்காவும் விரும்பவில்லையென்றும் அமெரிக்க ஜனதிபதி திரு. நிக்ஸன் கூறியுள்ளார்.

## லண்டன் தெருக்களில் தேர் பவனி

லண்டன், ஜூலை 5
அண்மையில் லண்டன் மாநகரைச் சேர்ந்த இஸ்லிங்டன் என்னுமிடத்தில் இந்துக் கோவில் ஒன்று கோலாகலமான முறையில் கும்பாபிஷேகம் செய்து திறந்து வைக்கப்பட்டது. பிரிட்டன் அடங்கிலுமிருந்த ஆயிரக்கணக்கான இந்துக்கள் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இந்த வைபவத்திற்கென விசேஷமாக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட ஸ்ரீயோகிஜி மகராஜும் மற்றும் 12 குருக்களும் இந்தக் கோவிலைத் திறந்துவைத்தனர்.

ரதோற்சவ வைபத்துடன் இவ் விழா ஆரம்பமாகியது. லண்டனிலுள்ள ஹைபாக் நந்தவனத்திலிருந்து புறப்பட்ட ரதபவனியில் 2000 மக்கள் வரை கலந்து கொண்டனர். இந்த ரத பவனி லண்டனில் பிரதான வீதிகளூடாகச்சென்று டிரபல்கார் சதுக்கத்தை அடைந்தது.

கோவில் திறப்பு விழா வைபவத்தை அடுத்து மாலையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இந்திய ஹைகமிஷனர் திரு.பந்த் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். பிரிட்டிஷ் பிரமுகர்களில் ஒருவராகக் கலந்து கொண்ட சொரன்ஸன் பிரபுவும் இக் கூட்டத்தில் பேசினுர்.

இங்கிலாந்து திருச்சபை, கத்தோலிக்க திருச்சபை, மற்றும் மதப் பிரிவுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இவ் வைபவத்தில் கலந்துகொண்டனர். இந்த ரதபவனியையும், கோவில் திறப்புவிழாவையும் டெலிவிஷன் மூலம் லட்சக்கணக்கான பிரிட்டிஷ் மக்கள் கண்டுகளிக்கும்வாய்ப்பு ஏற்பட்டது.

## வீணை வித்துவான் மறைவு

சென்னை, ஜூலை 5
பிரபல வீணை வித்துவான் வரகூர் திரு. முத்துச்சாமி அய்யர் (70 வயது) காலமாகிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அடையாறு மத்திய கர்நாடக சங்கீதக் கல்லூரியில் வயலின் பேராசிரியராக இவர் கடமையாற்றியுள்ளார்.

## இராணுவ அதிகாரி தற்கொலை

புதுடில்லி, ஜூலை 5
ரூர்க்கி இராணுவ ஆஸ்பத்திரியின் கமாண்டிங் அதிகாரி, கேணல் ஜே. ஆர். குமார் சிலதினங்களுக்குமுன் தென் டில்லியிலுள்ள ஆஸ்பத்திரியொன்றில்தற்கொலை செய்து கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மன அமைதியின்மை காரணமாக அவர் தமது கையிலுள்ள இரத்தக் குழாயை வெட்டிக்கொண்டு தற்கொலை செய்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

## நாயைக் கடிப்பது அமைதிக்குப் பங்கம்

லண்டன், ஜூலை, 5
நாயைக்கடிப்பது பொது அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதாகும் என்று போர்ட் வில்லியம்ஸ் என்றகுதிரை வியாபாரி மீது டைகர் என்ற நாயைக் கடித்ததாக தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி கூறினுர்.

தனக்கு நாய்க்குகாயம் உண்டாக்கும் நோக்கம் இல்லையென வில்லியம்ஸ் விசாரணையின் போது கூறினுர்.

## 'ஏழைகளுக்கு புதிய அரசு உதவி செய்யும்' —உடுவில் எம். பி.

உடுவில், ஞாயிறு
புதிய அரசாங்கமும், கல்வி அமைச்சரும் பாடசாலை கல்விக்கொள்கைகளைப் பற்றி தீர்க்கமாக இன்னும் ஒன்றும் கூறவில்லை கல்விக்கொள்கைவெளியிடப்பட்ட பின்னர் இவ்வித்தியாசாலையை மகாவித்தியாலயம் ஆக்கி, ஒரு நிரந்தர விளையாட்டு மைதானத்தையும் அமைத்துக்கொடுக்க ஆவன செய்வேன்''.

உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம் இணுவில் சைவமகாஜன வித்தியாசாலை விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு உரையாற்கையில் மேற்கண்டவாறு கூறினுர். வட்டார கல்வி அதிகாரி திரு. எஸ், ராசா தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

இன்றைய அரசாங்கம் ஏழைகளுக்கும் வறியவருக்கும் உதவி செய்ய முன்வந்துள்ளது. எனது பிரிவில் என்னுல் முடிந்தவரை அரசாங்கத்திடம் உதவி பெற்று எமது ஏழைப் பிள்ளைகள் கல்வி பெறவும் அரசாங்கத்தில் பங்குபெறவும் நடவடிக்கைகள் எடுப்பேன் என்றும் திரு. தர்மலிங்கம் கூறினுர்.

வித்தியாசாலை அதிபர் திரு, வ, நடராசா. ஆசிரியர் திரு, எஸ் சோதிப்பெருமாள் ஆகியோரும் பேசினர்,

போட்டிமுடிவில் அப்பாக்குட்டி இல்லம் 281 புள்ளிகள் பொன்னையா இல்லம் 179 புள்ளிகள் மயில்வாகனம் இல்லம் 146 புள்ளிகள் பெற்று முதல் மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்

## கோஷ்டிச் சண்டை

புத்தூர், ஞாயிறு
ஒரே இனத்தைச் சேர்ந்த இரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் 5 பேர் காயமடைந்தனர். புத்தூர் ஆவரங்காலில் நேற்று நடந்த இச் சம்பவத்தில் ஆயுதங்களும் பாவிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஸ்தலத்துக்கு விரைந்து சென்ற அச்சுவேலிப் பொலிசார் நிலைமையைக் கட்டுப்படுத்தினர். குடும்பத் தகராறே இதற்குக் காரணமெனக் கூறப்பட்டது.


சரித்திர காலத்திற்கு முற்பட்ட
## யானையின் எலும்புக் கூடு

டோக்கியோ, ஜூலை 5
சுமார் 40ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த யானையின் எலும்புக்கூடு ஒன்றை ஜப்பானிய [illegible]ப்பு ஆராய்ச்சியாளர்கள் அகழ்ந்தெடுத்தனர்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் [illegible] லப்பகுதிகளிலும் [illegible] வெப்ப மண்டலப் பகுதி[illegible]லும் வாழ்ந்து வந்த

## ஜெயப்பிரகாசரை கொல்ல முயற்சி

[illegible]ட்ன, ஜூலை, 5
[illegible] இயக்கத் தலைவர் திரு. ஜெயப்பிர[illegible]ஷ் நாராயணனை கொல்ல[illegible]



செல்வி ரேகினி சேவியரின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று மாலை 6மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது. செல்வி ரேகினி 'சதங்கை' நர்த்தனலய அதிபர் கலாஜோதி செல்வி லீலா நாராயணனின் மாணவியாவார்.

3-வது உலகத் தமிழ் மாநாடு
## தமிழக அமைச்சர் குழுவும் அறிஞர்களும்பாரிஸ்பயணம்

சென்னை, ஜூலை 5
தமிழக நிதியமைச்சர் மதியழகன் தலைமையில் 17 பேர்கள் இம்மாதம் பாரிஸில் நடைபெறும் 3-வது உலகத்தமிழ் மகாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

இம்மாதம் 15-ம் திகதி ஆரம்பிக்கும் உலகத்தமிழ் மகாநாடு மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

இலங்கை, பர்மா, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் உட்பட 39 நாட்டுப் பிரதிநிதிகள் 200க்கு மேற்பட்டவர்கள் விழாவில் கலந்து கொள்கின்ருர்கள்.

இம்மகாநாட்டில் சிலம்புச்செல்வர் சிவஞானகிராமணியார் கலந்து கொள்வதற்காக இன்று சென்னையிலிருந்து புறப்பட்டுள்ளார் மா. பொ. சி. வெளிநாடு செல்வதையொட்டி வழியனுப்புவிழாவும் நடைபெற்றது. இவ்விழாவில் தமிழக அமைச்சர்கள் நெடுஞ்செழியன். முத்துச்சாமி, பல்கலைக்கழக துணைவேந்தர் சுந்தரவடிவேலு, திரு. மு. வரதராசனுர், திருமதி சவுந்தரம் கைலாசம் ஆகியோர் பங்குபற்றி உரையாற்றினுர்கள்.

முதலாவது உலகத்தமிழ் மகாநாடு சிங்கப்பூரிலும் இரண்டாவது மகாநாடு சென்னையிலும் நடைபெற்றது தெரிந்ததே.

## 'பல்லவிக்கு லயம்தான் பிரதானம்'

சென்னை, ஜூலை5
'நல்ல சங்கீதக் கச்சேரிகளைக்கேட்டுவிட்டு தாமே அனுபவிப்பதுடன் நின்றுவிடுபவர்பலர். திரு அய்யங்கார் அவ்வாறில்லாமல் தாம்கேட்ட பல்லவிகளை அப்படியே ஸ்வரலயக் குறிப்புகளுடன் ஏற்படுத்தி வைத்துக் கொண்டார். அவர்சங்கீத ஞானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகவே சென்னையில் குடியேறினுர் அவருக்கு கர்னடக

திரு. ரங்கராமனுஜ அய்யங்கார் இயற்றிய 'கர்னடக சங்கீத பல்லவி சம்பிரதாயம்' என்னும் நூலை வெளியிட்டுவைத்துப் பேசுகையில் முன்னுள் ஐ. சி. எஸ் திரு. எஸ். வை. கிருஷ்ணசாமி குறிப்பிட்டார்.

அவர் மேலும்பேசுகையில் 'சம்பிரதாயமான கச்சேரிகளுக்குப் பல்லவி அணிகலன் பல்லவி பாடுவ

## சோஷலிசத்தை ஏற்கின்றன

பருத்தித்துறை, ஞாயிறு
'இதுவரை சகல முற்போக்குத் திட்டங்களையும் முழு மூச்சாக எதிர்த்து வந்த தமிழரசு-தமிழ்க் காங்கிரஸ் கட்சிகள் கூட,1956ம் ஆண்டுக்குப்பின் உருவாக்கப்பட்ட சோஷலிசத் திட்டங்களால் மக்கள் நன்மையடைவதைக் கண்டு எதிர்க்க முடியாத நிலையில், இவ் வரசாங்கத்தின் சோஷலிச திட்டங்களை ஆதரிப்பதாக கூறுகின்றன'.

இவ்வாறு உடுப்பிட்டி-பருத்தித்துறைத் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு கே. எஸ். கணேசு,' நேற்று முன் தினம் வியாபாரி மூலையில் நடைபெற்ற கட்சிக்கிளைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

## பிணையில் அனுமதி

புத்தூர், ஞாயிறு
ஆவரங்காலைச் சேர்ந்த திரு ரி. அருணசலம் என்பரது வீட்டில் பட்டப்பகலில் சந்தேகத்திற்கிடமான முறையில் இருவர் நின்றதாக வீட்டுச் சொந்தக்காரர் அச்சுவேலிப் பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து அச்சுவேலிப் பொலிசார் புலன்விசாரணை செய்து எஸ். செல்வராசா, பி. தனராசா ஆகிய இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியில் பிரதமவிருந்தினராச கலந்துகொண்டு உரையாற் கையில் மேற்கண்டவாறு கூறினர்.வட்டார கல்வி அதிகாரி திரு. எஸ், ராசா தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

போட்டிமுடிவில் அப்பாக் குட்டி இல்லம் 281 புள்ளிகள் பொன்னையா இல்லம் 179 புள்ளிகள் மயில்வாகனம் இல்லம் 146 புள்ளிகள் பெற்று முதல் மூன்றுஇடங் களையும் பெற்றுக்கெண் டன,

ஸ்தலத்துக்கு விரைந்து சென்ற அச்சுவேலிப் பொலி சார் நிலைமையைக் கட்டுப் படுத்தினர். குடும்பத் தக ராறே இதற்குக் காரண மெனக் கூறப்பட்டது.

# தமிழர் வாழுமிடமெல்லாம் நீதிமன்ற மொழி தமிழே

## இதுதான் காங்கிரஸ் கருத்து என்கிறர் நல்லூர் எம் பி.

தாவடி, ஞாயிறு

''தமிழ்மககள் வாழுமிட மெல்லாம் நீதிமன்றமொழி தமிழாகவிருக்க வேண்டும் என்பதே எங்கள் கட்சியின் கருத்து'' என்று நல்லூர் எம். பி திரு. சி. அருளம்பலம் கூறினர்.

நந்தாவில் மனேன்மணி அம்பாள் வீதிவில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் திரு. அருளம்பலம் நேற்றுப் பேசினர். திரு. இ. பொ. குமாரசாமி தலைமையில் கூட்டம் நடந்தது.

வட்டுக்கோட்டை எம்.பி. திரு. ஏ தியாகராஜா பேசுகையில் கூறியதாவது:-

''தமிழ் மக்களைப்பொறுத் தவரையில் பொருளாதார முன்னேற்றம் முக்கியமான தொன்றாகும். பொருளா தார முன்னேற்றத்திட்டத் திலேயே முழுக்க முழுக்க எனது எண்ணம் சென்று கொண்டிருககின்றது. அதை முன்னேற்றமடையச் செய் தால்தான் தமிழர் தலை நிமிர்ந்து வாழலாம்.

சிங்கள மக்கள் தமிழ் மக்களிடம் நல்லெண்ணம் வைத்திருக்கின்றார்கள். அவர்களுடன் ஒத்துழைத் தால் நன்மையுண்டு இந்த அரசாங்கத்தில் வகுப்பு வாதம் குறைவு.

திரு. என்.ரி. சிவஞானம் திரு. நடராசா உட்படப் பலர் உரையாற்றினர்.

# பலர் சிந்திக்கத் தவறிய விஷயங்களை அவர் சிந்தித்தார்

## சிங்கள எழுத்தாளருக்கு புகழ்மாலை

அக்குரசை, ஞாயிறு

''இலங்கையின் கலைச்செல் வங்கள் வெளிநாட்டிலிருந்து வந்த கலைஞர்களால் உரு வாக்கப்பட்டவை என்று நிரூபிப்பதற்கு அநேகர் முயற்சி எடுத்தார்கள். ஆனல் இந்தச் செல்வங்களை உருவாக்கியவர்கள் இலங் கைக் கலைஞர்கள்தாம் என் பதை நிலைநிறுத்த மார்ட் டின் விக்கிரமசிங்க எடுத்த முயற்சிகள் வியந்து பாராட் டத்தக்கவை. அதுபோலவே மக்கள் இலக்கியம் படைப் பதில் அவர் எடுத்த ஊக் கத்தை மறந்துவிடவும் முடி யாது.''

இவ்வாறு பழம்பெரும் சிங்கள எழுத்தாளரான திரு. மார்ட்டின் விக்கிரம சிங்காவின் 80 வயது பூர்த் தியையொட்டி அவரைக் கௌரவிப்பதற்காக நடை பெற்ற விழாவில் டாக்டர் அபய ஆரியசிங்க கூறினர்.

அவர் மேலும் கூறியதா வது:

துட்டகெமுனு காலத்திய அபிவிருத்தி வேலைகள் பற்றி திரு. மார்ட்டின் விக்கிரம சிங்க மிக உயர்ந்த கருத் துக்களை வெளியிட்டிருக்கின் கின்றார். இவை வேறெந்த அறிஞரும்வெளியிடாதவை. 'இசுருமுனி' பற்றி அவர் வெளியிட்ட கருத்துக்கள் டாக்டர் செனரத் பரண விதானையின் கருத்துகளுக்கு மாறுனவை. இம்மாதிரிப் பல புதிய கருத்துக்களை அவர் பலவாறு வெளியிட் டிருக்கிறார். அநேகர் சிந் திக்கத்தவறிய விஷயங்கள் பற்றி எல்லாம் அவர் சிந் தனையைச் செலுத்தி எழுத் தாக வடித்திருக்கிறார்.

### சமவேலைக்குச் சம சம்பளம்

# 'உதவிக் கல்வி அமைச்சரின் திட்டத்தை விரைவில் அமுலாக்குக'

யாழ்ப்பாணம், திங்கள்

'உதவிக் கல்வி அமைச்சர் தெரிவித்த சமவேலைக்கு சம சம்பளம் என்ற திட்டத்தை விரைவில் அமுலுக்குக் கொண்டுவர ஆவன செய்ய வும்'

இவ்வாறு கல்வி அமைச் சரைக் கோரும் தீர்மானம் அகில இலங்கை உதவி ஆசி ரியர்கள் சங்கக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. தலை வர் திரு கு. செல்வத்துரை தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு, தெற் கில் அமைக்கப்படவிருக்கும் 3 பல்கலைக்கழகங்களையும் அமைப்பதற்கு துரித நடவ டிக்கை எடுக்கும்படியும், அகில இலங்கையிலுமுள்ள ஆசிரியர்களுக்கென ஒருமாற் றுத் திட்டத்தை அமைப்ப தற்கும் நடவடிக்கை எடுக் கும்படியும் கூட்டத்தில் தீர் மானிக்கப்பட்டது.

அகில இலங்கைக்கும் பொதுவான நிரந்தரமான ஆசிரிய இடமாற்றம்ஒன்றை உருவாகும்வரையும் ஒரு தொகுதிக்கென அமையும் கிளிநொச்சி மாற்றுத்திட் டத்தை நிறுத்திவைக்கும் படி கல்வி அமைச்சரைக் கோரும் தீர்மானமும் நிறை வேறியது. (கு.வி.ம)

...ப்பு ஆராய்ச்சியாளர் கள் அகழ்ந்தெடுத்தனர்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வெப்ப மண்ட லப்பகுதிகளிலும், மித வெப்ப மண்டலப் பகுதி ...லும் வாழ்ந்து வந்த பலவகை யானைகளில் இதுவும் ஒன்றெனக் கியோடோ பல்கலைக்கழ கத்தைச் சேர்ந்த பேரா சிரியர் செட் சியோகாமி கூறியுள்ளார்.

ஜப்பானில் வடகோடியி லுள்ள முக்கிய தீவான தென் மத்திய ஹொக் கைடோவில் உள்ள கிரா மம் ஒன்றில் 150 பேர் கொண்ட புதைபொருள் ஆராய்ச்சிக் குழுவினர் இந்த எலும்புக்கூட்டை அகழ்ந்தெடுத் துள்ளனர்.

## எம். எல். ஏ. கடத்தப்பட்டார்

சண்டிகார், ஜூலை 5

ஜனசங் எம். எல். ஏ. டாக்டர் பாலமுகுந்தின் மனைவி, பஞ்சாப் கவர்ன ரைச் சந்தித்துத் தனது கணவன் கடத்தப்பட்டு விட்டதாகப் புகார் கூறி யுள்ளார்.

சிலர் தங்களது வீட்டுக்கு இரவில் வந்ததாகவும், அப் பொழுதிலிருந்து தனது கணவரைக் காணவில்லை யென்றும் அவர் தெரிவித் துள்ளார்.

அவர் கவர்னரைச் சந் திக்கச் சென்றபொழுது ஜனசங் தலைவர்களும் அவ ருடன் சென்றனர்.

## குண்டுக் காயத்துடன் குழந்தை பிறந்தது

வட கரோலினு, ஜூலை 5

காலில் துப்பாக்கிக் குண் டுக் காயத்துடன் குழந்தை ஒன்று வடக்குக் கரோலினு வில் வின்ஸ்டன் என்ற இடத் தில் பிறந்துள்ளது.

குழந்தையின் தாய் கர்ப் பமாக இருந்தவேளையில் பக்கத்திலிருந்த ஒருவருடன் ஏற்பட்ட விரோதம் காரண மாக எழுந்த சண்டையின் போது தாய் வயிற்றில் துப்பாக்கிக் காயமேற்பட் டது.

துப்பாக்கிக் காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டபோது குழந்தை ஒன்றைப் பிரசவித்தாள், அத்தாய். தாயின் வயிற் றைத் துளைத்த துப்பாக்கிக் குண்டு கர்ப்பத்திலிருந்த குழந்தையின் காலிலும் காயத்தை ஏற்படுத்தியுள் ளது. தாயும், ஆண்சேயும் தற்போது குணமடைந்துள் ளனர்.

## ஜெயப்பிரகாசரை கொல்ல முயற்சி

பாட்னு, ஜூலை, 5

சர்வோதய இயக்கத் தலை வர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணனை கொல்ல முய ற்சி நடந்துள்ளதாக பீகார் பொலிசில் புகார் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பீகார் மாகாணத்தில் சுற்றுப்பயணத்தை செய்து வந்த ஜெயப்பிரகாஷ் நாரா யண காரை ஜீப்பொன்று மோதியது. ஆயினும் ஜெயப் பிரகாசர் இந்த ஆபத்தி னின்றும் தப்பிவிட்டார்.

இந்தச் சம்பவத்தையடு த்து ஜெயப்பிரகாசரை கொல்லுவதற்காகவே இந்த மோதல் நடந்ததென்று கூறப்படுகின்றது.

## விமானத்தை கழுகு தாக்கியது

கல்கத்தா, ஜூலை 5

கல்கத்தாவிலிருந்து சென்னை வந்து கொண்டி ருந்த விமானத்தை கழுகு தாக்கியது.

விமானம் நடுவானில் பறக் கும் போதே கழுகு தாக்கத் தொடங்கியது விமானி புத்திசாதுரியமாக விமா னத்தைத திருப்பிச்சென்று கலகத்தாவில் விமானத்தை இறக்கினர். இதனல் விபத் தினின்றும்பிரயாணிகள் தப் பினர்கள்.

## மழையால் வந்தவினை

சென்னை, ஜூலை 5

கடந்த வியாழக்கிழமை சென்னையில் பெய்த மழை யின் காரணமாக மின்சாரக் கம்பிகள் அறுந்தமையால் இரு மாணவர்கள் மரண மடைந்தனர்.

குறிப்பிட்டதினம் இரவு சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரி பி. ஏ, வகுப்பில் படிக்கும் டி. கே. ராஜா திருச்சி என்சினியரிங்கல்லூ ரியில் பயிலும் சேஷா ஆகிய இருவருமே விபத் துக்குள்ளாகி மரணமாகி னர்.

......

## ஆணுகமாறிய பெண் காதல்மணம் புரிந்தார்

சென்னை, ஜூலை 5

ஆணுக மாறிய பெண் காதலித்துத் திருமணம் செய்துள்ளார்,

மதுரையைச் சேர்ந்த சரோஜினி என்பவர் கால வளர்ச்சியுடன் ஆணுகமாறி யவர். இப்போது அவரது பெயர் ஆசைத்தம்பியாகும் ஆசைத்தம்பி சிறு வயதில் தாம் பெண்ணுகஇருந்த போது தன்னுடன் சுற்ற பெண்ணையே காதலித்து மணஞ்செய்துள்ளார்.

அப்படியே ஸ்வரலயக் குறி ப்புகளுடன் ஏற்படுத்தி வைத்துக் கொண்டார். அவர்சங்கீத ஞானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கா கவே சென்னையில் குடியே றினர். அவருக்கு கர்னடக சங்கீதத்தின் நுட்பங்களை யெல்லாம் அறியும்பக்குவம் முதிர்ந்தது தான்சேகரித்து வைத்த சங்கீத பொக்கிஷ ங்களையெல்லாம் பாகுபாடா கத் தேர்ந்தெடுத்து இணக் கமாக ஒழுங்குபடுத்திக் கொண்டார் பலரிடம்கேட் டறிந்ததன் விளைவாக அவ ரிடமிருந்த பாடாந்தரங் கள் புதுமெருகுபெற்றன. இவ்விதம் சேகரித்ததை நூல்வடிவில் வெளியிட்டு கர்னடக சங்கீதத்துக்கு அளப்பரிய செல்வத்தை சேர்த்துவைத்தார்,''

...கையில் முன்னுள் ஐ.சி.எஸ் திரு. எஸ். வை. கிருஷ்ண சாமி குறிப்பிட்டார்.

அவர் மேலும்பேசுகையில் 'சம்பிரதாயமான கச்சேரி களுக்குப் பல்லவி அணி கலன் பல்லவி பாடுவ தில் வல்லமை தான் வித் வானை சாதாரண பாடகனி டமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது என்று குறிப் பிட்டார்,

'பல்லவிக்கு லயம்தான் பிரதானம். இதில் முறைப் படி சிட்சையும், சாதகமும் அவசியம். ரசிகர்கள் இரண் டரைமணிநேரத்துக்கு மேல் கச்சேரியில் உட்காரத்தயங் குவதனல் பல்லவியை முறைப்படி பாடுவது அரி தாகிவருகிறது' என்று திரு ரங்கராமானுஜ அய்யங்கார் தமது நன்றியுரையில் குறிப் பிட்டார்.

### பாலச்சந்தரின்

# வீணைக்கச்சேரிக்கு பாரிஸ் மக்கள் பாராட்டு

சென்னை, ஜூலை 5

சினிமா டைரக்டர் எஸ். பாலச்சந்தர் இப்பொழுது மேல்நாடுகளில் வீணைக்கச் சேரிகள் செய்து வருகின் றார்.

பிரான்ஸ் நாட்டின் தலை நகரான பாரிசில் இவரது முதலாவது வீணைக்கச்சேரி நடைபெற்றது. கச்சேரி யைக் கேட்பதற்குப் பல்லா லாயிரக்கணக்கான ரசிகர் கள் கூடியிருந்தனர். இவர் பல ராகங்களை வாசித்த போது ரசிகர்கள் ஆங்கி லத்தில் 'வன்ஸ்மோர்' (மீண்டும் மீண்டும்) என்று கேட்டு தமது ஆர்வத்தைக் காட்டினர்.

ஏமீன்ஸ் என்ற இடத்தில் வீணைக்கச்சேரி நடைபெற்ற போது ஒளிபரப்பும் வண்ண விளக்குகளும் தோரணங் களும் மண்டபத்தை அலங் கரித்தன. இரவு இரண்டு மணிவரை நடந்த கச்சே ரியை ஆர்வத்துடன் பாரிஸ் மக்கள் ரசித்தார்கள்.

லண்டனில் நடைபெற்ற பாலச்சந்தரின் வீணைக்கச் சேரியை 'டைம்ஸ்' என்ற லண்டன் பத்திரிகை வெகு வாகப் பாராட்டிச் செய்தி வெளியிட்டுள்ளது. ஸ்பெ யின், லெபனன் ஆகிய இடங்களிலும் கச்சேரி செய்துவிட்டு இம் மாத முதல் வாரத்தில் திரு. பாலச்சந்தர் தமிழகம்திரும் புவார்.

## பாராட்டுத் தீர்மானம்

நல்லூர், ஞாயிறு

பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் உள்ளூராட்சி அமைச்சர் திரு பீலிக்ஸ்டயஸ் பண் டாரநாயக்காவுக்கும் கோப் பாய் பாராளுமன்ற உறுப் பினர் திரு. சி. கதிரவேலுப் பிள்ளைக்கும் நல்லாசி கூற வேண்டுமென்ற தீர்மானம் அண்மையில் நடைபெற்ற உரும்பிராய் ஊரெழு பட் டினசபையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

...தாக வீட்டுச் சொந்தக் காரர் அச்சுவேலிப் பொலி சில் புகார் செய்ததைத் தொடர்ந்து அச்சுவேலிப் பொலிசார் புலன்விசாரணை செய்து எஸ். செல்வராசா, பி. தனராசா ஆகிய இரு வரையும் சந்தேகத்தில் பேரில் கைதுசெய்து மல் லாகம் மாஜிஸ்திரேட் முன் னிலையில் ஆஜர்செய்தனர். நீதிபதி இவர்கள் இருவரை யும் பிணையில் செல்ல அனு மதித்தார்.

## பேதி நோய் பரவுகிறது

அம்பன், ஞாயிறு

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த அம்பன் பகுதியில் பேதி நோயால் குழந்தை கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அம்பன் அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்ற வரும் குழந்தைகளின் தொகை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது.

இந்நோயால் பாதிக்கப் பட்ட குழந்தை ஒன்று அண்மையில் மரணமடைந் தது.

## பெற்றார் தினம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

புலோலி மேற்கு சைவ ஆண் பாடசாலை பெற்றார் தினமும் பரிசளிப்பு விழா வும் இம்மாதம் 13-ந் திகதி நல்லூர் மங்கையர்க்கரசி பாடசாலைத் தலைமை ஆசி ரியை திருமதி மு. பாக்கி யம் தலைமையில் நடை பெறவிருக்கிறது.

# 'சம்பள உயர்ச்சிக்காக ஒன்று பட்டுழைப்போம்'

## காவலாளர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

''ஏனைய அரசாங்க சேவை யாளரிலும் பார்க்க நாம் 4 மணித்தியாலங்கள் அதிக மாகப் பணிபுரிகின்றோம் அதிகப்படியாக நாம் செய் யும் சேவைக்காகப் பிரத்தி யேக ஊதியம் கிடைப் பதில்லை இதற்கென லீவும் வழங்கப்படுவதில்லை இவற் றை நாம் ஒன்று சேர்ந்து உழைப்பதின் மூலமே அரசாங்கத்திடமிருந்து பெறமுடியும்.''

அகில இலங்கை அரசாங்க தேசிய பொதுக்காவலாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது,

சகல திணைக்களங்களி லும் பணிபுரிகின்ற அரசாங் கப் பொதுக்காவலர்களை ஒன்றுதிரட்டிஒரேசங்கத்தில் சேர்த்து இயங்குவதற்கு அகில இலங்கை அரசாங்க தேசிய பொதுக்காவலாளர் சங்கம் முடிவுசெய்துள்ளது இது சம்பந்தமாகஇச்சங்கத் தின் தலைவர் திரு. பாலச்சந்திரன் காவலாளர் களுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளார்.

## அபிஷேகம்

மீசாலை, திங்கள்

மீசாலை தெற்கு- கரும்பி மாவடி கந்தசுவாமிகோவில் அபிஷேகம் இம் மாதம் 10ம் திகதி நிகழும் அன்றுபகல் அன்னதானமும், சொற் பொழிவுகளும், சங்கீத பிர சங்கமும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கடவுள் மிகவும் கருணையுள்ளவர். எல்லையற்ற அன்புடைய அவர் வேறு எப்படி இருக்க முடியும்? அவரே நமக்கு வழிகாட்டுகிறார். கட்டுப் படுத்துகிறார்: கண்காணிக்கிறார், நாம் அவருடமை. அவர் நம் உடமை. நமக்குள் அவர் இருக்கிறார். அவரில் நாமெல்லாம் இருக்கிறோம். நாமெல்லாம் அவரே. அவரைத்தவிர வேறொன்றுமில்லை எல்லாம் அவரே. இவை உணர்வதே பேரானந்தம். —சுயாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம் 22-ந்திகதி (6-7-70)


## ஆலயப் பிரவேசப் பிரச்னை

'அரசாங்கம் சட்டம் இயற்றி அதன் துணையோடு ஆலயப்பிரவேச பிரச்னையைத் தீர்வைக்க முன்வருவதற்குத்து நாம் இடம் வைக்கக் கூடாது: அரசாங்கம் தலையிட்டு நமது சமயப்பிரச்னையைத் தீர்த்துவைக்க முன்வருவது நமக்கோ அன்றி நம் பழம் பெரும் சமயத் திற்கோ பெருமை தரக்கூடிய விஷயமல்ல' இப்படி அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவரும் கொழும்பு விவேகானந்த சபையின் உப தலைவருமான திரு. இ. லக்ஷ்மண ஐயர் கொம்பனித்தெரு சைவமுன்னேற்றச் சங்க ஆதரவில் நடந்த வைபவமொன்றில் பேசுகையில் சரியாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார். இந்துசமயத்தின் பிறப்பிடமெனக் கருதப்படும், இந்தியாவில் இப்போது ஆலயப்பிரவேசத் தடை அநீதி இல்லையென்றும் திரு. லக்ஷ்மண ஐயர் எடுத்துக்காட்டி அரசாங்கம் சட்டம் கொண்டுவந்து கட்டாயத்தின் பேரில் ஆலயக்கதவுகளைத் திறக்கச் செய்வதற்கு முன்னதாகவே வடபகுதியிலுள்ள ஆலயக்கதவுகளைத் திறந்துவிடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்.

இதே சமயம் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தூதுக்குழுவொன்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவைச் சந்தித்து மாவிட்டபுரம் ஆலயப்பிரவேசப் பிரச்னை சம்பந்தமாக எடுத்துக்கூறியிருக்கிறது. மாவிட்டபுரம் கொடியேற்றத் திருவிழாவுக்கு முன்னர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ள பிரதமர் அட்டர்ணி ஜெனரலுடனும் இதர அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தியிருக்கிறார்

முடிந்தபின் ஆலயக்கதவுகளை அனைவருக்கும் திறந்துவிடுவதற்கு ஒரு தினத்தை நிர்ணயித்து அறிவிப்பதாக ஆலயமுகாமையாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இம்முறை திருவிழா முடிவடைந்து சில மாதங்களின் பின் ஆலயக்கதவுகளை அனைவருக்கும் திறந்துவிடத் தயாராயிருப்பவர்கள் திருவிழாவுக்கு முன்னரே, அமைதியான முறையில் ஆலயக் கதவுகளைத் திறந்துவிடுவதால் என்ன கெட்டுவிடும்?

சென்ற வருடங்களில் நிகழ்ந்த அசம்பாவித நிகழ்ச்சிகளுக்கு மீண்டும் இடம் கொடுக்காமலும் அரசாங்கம் சட்டமியற்றி அதன் துணையோடுகட்டாயப்படுத்திஆலயக் கதவுகள் திறக்காமலும் கால நிலைமையை உணர்ந்து மனதை மாற்றி அமைதியான முறையில் ஆசாரசிலர்கள் அனைவரும் ஆலயத்துள் சென்று ஆண்டவனை வழிபட வழிவகுப்பதே விவேகமான செயலாகும்.

வடபகுதியில் பல ஆலயங்கள் அனைவரும் எவ்வித பாகுபாடுமின்றி உள்ளே சென்று வணங்குவதற்காகத் திறந்துவிடப்பட்டிருக்கின்றது! இந்த ஆலயங்களின் கதவுகள் திறக்கப்பட்டிருப்பதால் அவற்றின் மகிமை எந்தவிதத்திலும் குறைந்துவிடவில்லை. மாவிட்டபுரம் மட்டுமல்ல இன்னும் பல ஆலயங்களும் சைவமக்களில் ஒருசாராரை உள்ளே சென்று வணங்க இன்னும் அனுமதியளிக்கவில்லை. நீண்டகாலமாக இருந்துவரும் பழக்கத்தை மாற்றுவது சுலபமாக இருக்காதென்பது உண்மையே ஆயினும் இன்றுள்ள நிலைமையை உணர்த்து சட்டத்துக்குப் பணிந்து கதவுகளைத்

## செனட்டில் நீதியமைச்சருக்கு 'திரு' பதில் 3

# 56-ல் தனிச்சிங்கள மசோதாவை கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்தது

1956ல் தனிச் சிங்கள மசோதா ஆட்சிமன்றத்தில் கொண்டுவரப்பட்ட போது படுத்தித்துறை ஆட்சிமன்ற அங்கத்தவராக இருந்த திரு. பி. கந்தையா தனது கருத்தை வெளியிட்டார். அவர் தமிழ்க் காங்கிரஸினதோ அல்லது தமிழரசுக்கட்சியினது அங்கத்தவரோ அல்ல. அவர் ஒரு கம்யூனிஸ்ட்கட்சி அங்கத்தவர் அவரை மதிப்புக்குரிய நீதியமைச்சருக்கு நினைவில் இருக்கிறதோ என்பது எனக்குத் தெரியாது. எப்படியிருப்பினும் மேற்படி மசோதா கொண்டு வந்தபோது அவர் கூறியதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

''இந்தச் சபையில் எனது கட்சியாளர்களை இந்த மொழிமசோதாவை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. ஏற்கனவே இது பெரும் பிரச்னைக்குரிய விடயமாகியுள்ளது. இந்நாட்டின் அரசகரும மொழிகளாகத் தமிழும் சிங்களமும் இருக்க வேண்டும் என்பதையே கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்துவருகிறது.

''இந்நாட்டின் பிரஜை என்ற முறையில் அரசியலிலும், எனது வாழ்க்கையிலும் எனது மொழியை உபயோகிக்க எனக்கு உரிமையுண்டு. எனது மொழியுரிமையை நீங்கள் தர மறுக்கும்போது இந்நாட்டின் தமிழன் என்ற முறையில் நான் வைத்திருப்பதையும் எனகு வேண்டியதையும் மறுக்கின்றீர்கள் என்பதேயாகும்.

...கம்யூனிஸ்ட்கட்சி அரசியல், பொருளாதாரம் ஆகிய சகல துறைகளிலும் உரிமைகளைப் பெறவே போராடுகிறது, எந்த விதத்திலும் அடக்கப்படுவதை அது விரும்பவில்லை: இந்த எமது அரசியல் தத்துவத்தின் அடிப்படையிலேயே கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்த நாங்கள் இந்த மசோதாவை மறுப்...

அவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தால் என்ன, குறைவாக இருந்தால் என்ன இந்த உரிமையுண்டு. ஒருவரோ அல்லது ஒரு மொழிப் பிரிவினரோ இந்நாட்டுப் பிரஜைகள் என்ற முறையில் அவர்களுக்குரிய உரிமைகளை அனுபவிப்பதில் மற்றொரு மொழிப்பிரிவினரிலும் பார்க்கத் தாழ்வாகவோ உயர்வாகவோ கருதப்படக்கூடாது. அந்த

## பண்டா - செல்வா ஒப்பந்தம் பயன் தந்தது

நிலையில் இருக்கவும் கூடாது.

எனவே தமிழ்மக்கள் நம்பிக்கையை இழப்பதற்கும், ஆத்திரப்படுவதற்கும் இது நேரமல்ல. ஆனால் அநீதியை எதிர்த்து நீதியான அரசாங்கத்தை அமைக்க முயற்சியெடுக்க வேண்டும். எந்த வேளையிலும் தமிழ்மக்கள் பிரிவினை பற்றிச் சிந்திக்கவே கூடாது. இதற்குப் பதிலாக மிக நெருங்கிய நட்புறவைச் சிங்கள மக்களோடு ஏற்படுத்துவதற்கு நினைக்கவேண்டும். எனவே தான் நான் அவர்களுக்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்கக்கூடியன இடதுசாரி அரசியல்கட்சிகளே எனக் கூறியுள்ளேன் இந்நாட்டில் இரண்டே இரண்டுகட்சிகளே தேசிய மனப்பான்மைஉடையன. அவை கம்யூனிஸ்ட்கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியுமாகும். மற்றக் கட்சிகளெல்லாம் அவற்றின் தேசிய மனப்பான்மையைக் கைவிட்டுள்ளன.

திரு. பி. கந்தையாவின் இந்த உரையை நான் எனது மதிப்புக்குரிய நண்பருக்குத் தெரிவித்துள்ளேன். நான் இங்கு அவருக்கு மட்டு

யெனக் கூறினர். ஒப்பந்தம் எழுதப்பட்டு அந்த மை காயுமுன்னரே அது பயனற்றதாகிவிடுகிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நாட்டில் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன, அவை யாவும் மை காயுமுன்னர் பயனற்றனவாகிப் போய் விடவில்லை என்பதை மதிப்புக்குரிய அமைச்சருக்கு ஞாபகப்படுத்த நான் விரும்புகிறேன். ஒரு அரசாங்கத்தில் மட்டும்

ஒப்பந்தங்கள் எடுக்கப்படவில்லை. முதலாவது ஒப்பந்தம் பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் பற்றி யாவருக்கும் தெரியும். இந்நாட்டில் மொழிசம்பந்தமான சகல திருத்தங்களையும் செய்வதற்கு அடிப்படைக் காரணமாகவுள்ளது இந்த ஒப்பந்தமேயாகும் உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சிம்மாசனப் பிரசங்கத்திலும் மொழி பற்றிக் குறிப்பிட்டுள்ளவையும் இவ்வொப்பந்தம் காரணமாக ஏற்பட்டமுடிவுகளேயாகும்.

முதல்தடவையாக திரு. பண்டாரநாயக்கா தலைமையில் சிங்கள மக்களது தலைவர்களும், திரு. செல்வநாயகம் தலைமையில் தமிழ்மக்களது தலைவர்களும் மொழிப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதற்காகச் செய்யப்பட்டதே மேற்படி ஒப்பந்தமாகும். தமிழமக்கள் இதனுல் திருப்தியடைந்தார்கள் நாடு மொழிவாரியாக இரு பிரிவுகளானது வடக்கும் கிழக்கும் ஒரு பிரிவாகவும் ஏனைய பகுதி ஒரு பிரிவாகவுமானது. இவ்வொப்பந்தத்தில் மாவட்டசபை பற்றிய விடயமும் இருந்தது. அதை நாம் மறந்துவிடுவோம். இது ஒரு சரித்திர முக்கியத்துவம்

யிலுள்ளஒரு உடன்படிக்கை, இரகசிய உடன்படிக்கை பற்றி ஒருவித நோக்கமுமிருக்கவில்லை, அப்பேச்சுவார்த்தை ஆகக்குறைந்த கோரிக்கைகள் பற்றியதாகவேயிருந்தது. அரசாங்கம் அமைக்கவேண்டுமானல் இவற்றைத்தந்தே ஆகவேண்டுமென்பதே கோரிக்கை. எல்லாப் பேச்சுவார்த்தைகளும் அறிக்கைகளாகவுள்ளன:

இப் பேச்சுவார்த்தையின் முக்கியத்துவம் என்னவென்றால் 1944-ம் ஆண்டு தனிச் சிங்களத்தை முழுமூச்சாக நின்று ஆதரித்த திரு டட்லி சேனநாயக்காவை தமிழ்மொழி விசேஷ மசோதாவின் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளச் செய்தமையேயாகும். இதன் பலனாக 1966-ம் ஆண்டு ஜனவரி 8-ம் திகதி தமிழ்மொழி விசேஷ உபயோகச் சட்டத்தைக் கொண்டுவந்தோம்.

மதிப்புக்குரிய நீதியமைச்சர் தனது விவாதத்தின் போது 'நீங்கள் அரசாங்கத்தில் இருக்கும்போது சமஷ்டியை ஏன் பெறவில்லை' பெறவில்லை' என்ற கேள்வியைக்கேட்டார். நாம் கோரியது ஆகக்குறைந்த அளவான கோரிக்கைகளே. அதில் சமஷ்டி அமைப்பது பற்றிக் கோரப்படவில்லை. உங்களுக்கு இப்போதுள்ளது போன்ற அரசியல் அமைப்பை மாற்றியமைக்கத்தக்க வாய்ப்பை அளிக்கவல்ல பெரும்பான்மை எங்களுக்கு அப்போது இருக்கவில்லை. (தொடரும்)

— —

### உரிமையைப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வாழும் பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்க

# ஜயாறன் எழுதுவது..

நேற்று திருவானைக்காவல் மகாகும்பாபிஷேக வைபவங்களையெல்லாம் தரிசனம் செய்தேன் நேரில் சென்றல்ல. திருச்சி வானொலி நிலையத்தார் காலை 9முதல் 10-50 வரையில் செய்த நேர்முகவர்ணனையைக் கேட்டதும் அங்கு நேரில் சென்று தரிசித்தது போல் அவ்வளவுதத்ரூபமாக இருந்தது.

கனகசபை, சத்யசீலன் என்ற இருவரும் உள்ளத்தை உருக்கும் முறையில் அப்பக்திக்காட்சிகளையெல்லாம் வர்ணித்தார்கள். றேடியோவைக் கண்டுபிடித்தவர்களை வாழ்த்துகின்றேன். அங்குநேரில் சென்று பார்ப்பதென்றால், இச் சமயம் ஏனையோருக்கும் முடியக்கூடியதா? பக்கத்திலுள்ள திருச்சிக்குச் சென்று இந்த கும்பாபிஷேகத்தைப் பார்க்கவேண்டுமென்று கேட்டால் ஆட்சியாளர் அனுமதிப்பார்களா? இதன் மகிமை அவர்களுக்கு என்ன தெரியப்போகிறது? இருக்குமிடத்திலிருந்தே காசுபணம் செலவில்லாமல், இதையெல்லாம் மனக்கண்ணில் கண்டு, இன்புறக்கூடியதாகச் செய்த எல்லாம் வல்ல திருவருளின் கருணையே கருணை!

0 0 0

திருவானைக்கா ஒரு சிவஸ்தலமா? அல்லது விஷ்ணுஸ்தலமா? அது எங்கே இருக்கிறது? என்று நன்குபடித்த ஒரு சைவ அன்பர் கேட்டதும் திடுக்கிட்டேன் இதோ பக்கத்திலுள்ள திருச்சிக்கு ஒரு மைல் தூரத்திலேதான் மூவராலும் பாடல்பெற்ற இந்தத்தலம் உள்ளதென்பது, இங்குள்ள ஒரு படித்த சைவ அன்பருக்கும் தெரியாமல் போனதே என்று வருந்தினேன். யாத்திரை தடைகள் இல்லாவிட்டாமல், ஈழத்திலிருந்து ஆயிரக்கணக்கான சைவஅன்பர்கள் இந்த கும்பாபிஷேகத்துக்குச் சென்றிருப்பார்களல்லவா? ரயில், விமானம் இவை வருவதற்குமுன் நமது முன்னோர்கள் பாய் மரக்கலங்களிலே தாராளமாகச் சென்று தரிசனம் செய்துவந்தனர்விஞ்ஞானம் வளர்த்திருக்கும் இக்காலத்திலே மனிதனின் மனம் விரிவடைவதற்குபதில் மிக்க

னைக்குள் புகுந்து கடிக்கவே, யானை ஓங்கி அடித்ததால் இரண்டும் இறந்தனவாம். யானைக்கு வீடளித்து சிலந்தியை சோழர்குலத்து அரசராகப் பிறக்குமாறு அருள் செய்தாராம் இறைவன். அந்தச் சிலந்தியே மறுபிறப்பில் கோச்சங்க சோழராகப் பிறந்து, திருவானைக்காவல் கோயிலைக் கட்டியதாகக் கதை.

அச்சோழமன்னன், தினசரி காவிரியில் நீராடி வந்து இக்கோயிலில் வழிபடுவது வழக்கமாம். ஒரு நாள் காவிரிவெள்ளத்தில் அவர் போட்டிருந்த மணி மாலை அடித்துப் போய்விட்டது. சோழன்''இறைவா உனக்கே அர்ப்பணம்'' என்று கூறிவிட்டு கோவிலுக்கு வழிபட வந்தபோது,மூலமூர்த்திமீது அந்த மணிமாலை இருந்ததைக்கண்டு வியந்து விசாரித்தான். அன்று காலை காவிரித் துறையில் வழக்கம் போல் குடத்தில் தீர்த்தம் எடுக்கையில், வெள்ளத்தில் அடித்துவந்த ஒரு மணிமாலை குடத்தில் தண்ணீருடன் சேர்ந்து புகுந்ததாயும். அபிஷேகம்செய்யும்போது அந்த மாலை மூர்த்தியின்மீது அப்படியே விழுந்ததாகவும் சிவாச்சாரியார்கள் தெரிவித்ததாகக் கதை. இந்த அழகான கதையை வைத்து சுந்தரமூர்த்திசுவாமிகளும் ஒரு பதிகம் பாடியுள்ளார்.

சுமார் ஒன்றரை லட்சம் பேர் வந்து இந்தக் கும்பாபிஷேகத்தைத் தரிசித்தனராம் ஸ்ரீகாமகோடி புதுப் பெரியவாள் ஆசியுரை கூற திருமுருககிருபானந்தவாரியார் தவத்தின் பெருமையைக்கூறி சிலந்திப் பூச்சிக்கும் அருள்செய்த கருணை வள்ளல், மனிதரில் எல்லாருக்கும் அருள்செய்வார் என்றார். அருள்வெள்வமும் பக்திவெள்ளமும்அங்கு கரைபுரண்டோடியதை வானொலி மூலமே அறிய முடிந்தது. திமுக ஆட்சியிலே தமிழகத்தில் இவ்விதம் கோவில் வைபவங்கள் நடப்பது குறிப்பிடத்தக்கது. என்றென்றும் சைவம் அழயாதென்பதை உணரக்கூடியதாக இருந்தது.

0 0 0

ஈழத்து சிதம்பரம் என்னும் காரைநகர் சிவன் கோவில் கும்பாபிஷேகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வுக்கு முன்னர் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ள பிரதமர் அட்டர்ணி ஜெனரலுடனும் இதர அதிகாரிகளுடனும் ஆலோசனை நடத்தியிருக்கிறார்

இந்த நிலைமைகளிலிருந்து ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக இப்பே துள்ள சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச்சட்டம் திருத்தப்படும் அல்லது புதிய சட்டம்உருவாக்கப்படுமென்று கருத இடமுண்டு.

மாவிட்டபுரம் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக இது வரை சிலர் நடத்திய பேச்சு வார்த்தைகளிலிருந்து முன்னர் போல் இம்முறையும் திருவிழா நடைபெற சகலரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் திருவிழா நீண்டகாலமாக இருந்து வரும் பழக்கத்தை மாற்றுவது சுலபமாக இருக்கா தென்பது உண்மையே ஆயினும் இன்றுள்ள நிலைமையை உணர்த்து சட்டத்துக்குப் பணிந்து கதவுகளைத் திறப்பதற்கு வழிவகுக்காமல் மனக்கதவைத் திறந்து ஆலயக்கதவுகளையும் திறந்துவிட வடபகுதி ஆலய முகாமையாளர்களும் ஊர்மக்களும் முன்வருவது சிறந்தது

இந்நாட்டிலுள்ள தமிழ் மக்களின் இன்றைய நிலையையும் வருங்காலத்தையும் உணர்ந்து தமிழ் மக்கள் மத்தியில் பிரிவினை, பாகுபாடு, ஏற்றத்தாழ்வு ஆகியவைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அவசியம்.

விதத்திலும் அடக்கப்படுவதை அது விரும்பவில்லை: இந்த எமது அரசியல் தத்துவத்தின் அடிப்படையிலேயே கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்ந்த நாங்கள் இந்த மசோதாவை முழுப் பலத்துடனும் எதிர்க்கின்றோம். இந்நாட்டின் மக்கள் யாவருக்கும் இயற்கையாகவே தங்கள் மொழி உரிமையைப் பெற்றுள்ளார்கள். அவர்களுக்குத் தங்கள் மொழியில் தங்களை ஆளுவதற்கு உரிமையுண்டு. தங்கள் மொழியையும் கலாசாரத்தையும் வளர்ப்பதற்கும் அவர்களுக்கு உரிமையுண்டு. எந்தவொரு மொழிப் பிரிவினருக்கும் ...ன.

திரு. பி. கந்தையாவின் இந்த உரையை நான் எனது மதிப்புக்குரிய நண்பருக்குத் தெரிவித்துள்ளேன். நான் இ... அவருக்கு மட்டுமல்ல, அவரது சகபாடிகளான சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த செனட்டர்களுக்கும்தான் கூறுகிறேன். சம அந்தஸ்துக்கான அடிப்படை கோரிக்கையை நாங்கள் ஒரு பொழுதும் விடமாட்டோம் நாட்டில் தேசிய சோஷலிசம் வரும்வரை எங்கள் உரிமையைப் பெறுவதற்குக் காத்திருக்கமுடியாது.

மேலும் மதிப்புக்குரிய அமைச்சர் ஒப்பந்தங்களில் தமக்கு நம்பிக்கை இல்லை ஏனைய பகுதி ஒரு பிரி...கவுமானது. இவ்வொப்பந்தத்தில் மாவட்டசபை பற்றிய விடயமும் இருந்தது. அதை நாம்மறந்துவிடுவோம். இது ஒரு சரித்திர ...க்கியத்...வம் வாய்ந்த தஸ்தா...வஜ் ஆகும். ஆனால் அது கிழித்தெறியப்பட்டது, அது செயற்படுத்தப்படவில்லை. ஆனால் அடிப்படைக்கோட்பாட்டின்படி இவ்வொப்பந்தம் காரணமாக மொழியடிப்படையில் நாடு இரு பிரிவுகளானது. தற்போது இவ்வொப்பந்தத்தின் அடிப்படைநோக்கம் உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருக்கும் தமிழ்மொழி விசேஷ சட்டத்தின் மூலம் சட்டரீதியாகச் செயல்படுத்தப்படுகிறது, இவ்வாறிருக்க ஒருஅரசியல் ஒப்பந்தம் அது கைச்சாத்திடப்பயன் படுத்திய மை காயமுன்னரே பயனற்றதாகிவிடுகிறது என ஒருவர் கூறுவது மடமையானதாகும். அரசியல் ரீதியில் பிழையான கருத்தாகும். இது தனது சொல்லால் தன்னை ஏமாற்றிக்கொள்வதாகும்.

நான் இப்போது இந்த மதிப்புக்குரிய சபைக்கு 1965-ம் ஆண்டு நிகழ்ந்த சம்பவங்களை நினைவு கூருகிறேன். 1965-ம் ஆண்டு திரு. டட்லிசேனநாயக்காவுக்கும், திரு. செல்வநாயகத்துக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோது ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடவேண்டுமென்ற நோக்கம் இருக்கவில்லை. ஒப்பந்தம் ஒன்று இருந்ததாக அரசியல் பிரச்சாரத்துக்காக தற்போது அரசாங்கத்தில் உள்ளவர்கள்-அன்று எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் பிரச்சாரம் செய்ததாகும். என்ன நடந்ததெனில் கூட்டுச்சேர்ந்து ஒரு அரசாங்கம் அமைப்பது பற்றியே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஐக்கிய தேசியக்கட்சி தமிழரசுக் கட்சி ஆகிய இருகட்சிகளும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆகக் குறைந்த கோரிக்கைகள் பற்றி நாங்கள் பேச்சுவார்த்தை நடாத்தினோம் இந்தக்கோரிக்கைகளை வழங்கக்கூடிய வழிவகைகள்பற்றியும் ஆராய்ந்தோம்.

'மேற்படி பேச்சுவார்த்தையின்போது நீங்கள் ஏன் சமஷ்டி அரசியல் முறையைக்கேட்கவில்லை? என்ற ஒரு கேள்வியை நீதியமைச்சர் என்னைக் கேட்டார் உண்மையில் நாங்கள் கேட்கவில்லை- கேட்கமுடியவில்லை. ஏனெனில் ஆகக்குறைந்த கோரிக்கைகளை கோரினோம். அது ஒரு தனிப்பட்ட விவகாரம். அது திரு. செல்வநாயகத்துக்கும் திரு. டட்லி சேனநாயக்காவுக்குமிடை

## உரிமையைப் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வாழும் பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்களில் இருந்து ஆங்கிலத்தை அப்புறப்படுத்தி சிங்களத்தை புகுத்தவேண்டும் என்றார். அதேபோல தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள நீதிமன்றங்களிலும் தமிழ் தான் இடம் பெறவேண்டும். என திரு. செல்வநாயகம் மேலும் பேசுகையில் கூறினார்.

தீவுப்பகுதி எம். பி. திரு. கர. பொ. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

தமிழ் மக்களின் உரிமைகளை எப்படிபெறுவது தமிழ் மக்களின் உரிமைகளை எப்படிப் பாதுகாப்பது என்று தெரியாத நிலையில் இன்று தமிழ்மக்கள்தவிக்கின்றனர். சமதர்ம ஆட்சி செலுத்துவோம் என ஐக்கிய முன்னணி அரசு கூறுகிறது, தமிழ் மக்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப் பொறுதிருந்து பார்ப்போம். சிறிமா அரசு தமிழரின் உரிமைகளைத் தந்தால் நாமும் ஒத்துழைப்பு நல்குவோம்.

திரு. செ. சந்திரகாசன் பேசுகையில் அண்மையில்மந்திரிமார்சிலர் இனத்துவேசத்தை கிளப்பமாட்டோம் என்றும் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்குவோம் என்றும் கூறிவந்ததாலேயே அவர்களை நாம் எதிர்க்கவில்லை என்றார்

மற்றும் மூதூர் இரண்டாவது எம். பி. திரு. தங்கத்துரை உட்படப் பலர் உரையாற்றினர்.

— —

## விவசாயிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலைகளைச் செய்துகொள்ள முடியாமல் இருக்கிறார்கள் என்றும் இவர்கள் தனிப்பட்ட டிராக்டர் சொந்தக்காரர்களின் தயவை நாட வேண்டியிருப்பதால் சுரண்டப்படுகிறார்கள் என்றும் இவ்வாறு பெரும் செலவு செய்து உழைக்கும் விவசாயிகளை சும்மா இருப்பவர்கள் பெருமளவில் சுரண்டுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

எனவே இவ்வாறு விவசாயிகளும் தம் உழைப்பை இழந்து போகாமல் தடுப்பதற்கும் சுரண்டுகிறவர்களிடமிருந்து பாதுகாப்பதற்கும் அரசாங்கமே அவர்களுக்கு டிராக்டர் வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

களில தாராளமாகச் சென்று தரிசனம் செய்துவந்தனர் விஞ்ஞானம் வளர்த்திருக்கும் இக்காலத்திலே மனிதனின் மனம் விரிவடைவதற்குபதில் மிக்க குறுகலாகி யாத்திரை செய்யவும் முடியாமல் தடுத்துக்கொண்டிருப்பதைக் காண, நாம் உண்மையில் முன்னேறுகிறோமா? என்று சந்தேகிக்கவேண்டியுள்ளது

0 0 0

பெரியயானைக்கும் சின்னச் சிலந்திக்கும் கூட அருள் செய்த மூர்த்தியாம் ஆனைக்கா அண்ணல் வெண்நாவல் மரத்தடியே இருந்த மூர்த்திமீது சருகு அசுத்தம் விழாமல் சிலந்தி பந்தல் போட்டது. யானை தினசரி காவிரி தீர்த்தத்தை துதிக்கையில் கொணர்ந்து அந்த மூர்த்திக்கு அபிஷேகம் செய்யுமாம் அதனால் சிலந்தி போட்டபந்தல் நாசமடையும். சிலந்திக்கு கோபம் வந்து, யானையின் துதிக பதை உணரக்கூடியதாக இருந்தது.

0 0 0

ஈழத்து சிதம்பரம் என்னும் காரைநகர் சிவன் கோவில் கும்பாபிஷேகம் வருகிற10-ம்திகதி வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது. இந்த வைபவங்களையும் அன்று உடனுக்குடன் இலங்கை வானொலியில் நேர்முக வர்ணனை செய்யப்போகின்றார்களாம். மிக நல்லது. நேரில் செல்லமுடியாதவர்களும் வ னொலிமூலம் கேட்டுப் பயனடையக்கூடும்.

0 0 0

தாரமாகிய பொன்னித் தண்டுறை ஆடி விழுத் து, நீரில் நின்றடிபோற்றி நின் மலா கொள் என ஆங்கே, ஆரங்கொண்ட எம் ஆனைக் காவுடை ஆதியை நாளும், ஈரம் உள்ளவர் நாளும், எம்மையும் ஆளுடையாரே.

— ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள்,

டெலிபோன் இணைப்பு:

# சிங்களப் பகுதிகளை புறக்கணித்தார்களாம்

கோட்டை, ஞாயிறு

கடந்த ஐந்து ஆண்டுகளில் சிங்களப்பகுதிகளில் டெலிபோன் வசதிகள் செய்து கொடுப்பதில் மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டப்பட்டுள்ளதாகவும், யாழ்ப்பாணத்தில் தமிழ் முதலாளிகளுக்குக் கொடுக்கப்பட்ட டெலிபோன் இணைப்புகளுக்கான உரிய கட்டணங்கள் அறவிடப்படவில்லையென்றும் தபால், தந்தி போக்குவரத்து சேவைகளில் நடைபெற்றுள்ள ஊழல்கள்பற்றி நடத்தப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாம். இச்செய்தியை 'தவஸ' பத்திரிகை வெளியிட்டிருக்கின்றது.

தபால் தந்திப் போக்குவரத்துப்பகுதியில் செயல்படும் 'தேசப்பிரியர்கள் இயக்கம்' இந்தத் தகவல்களை அமைச்சர் குமாரசூரியரிடம் மகஜர் ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளதாம்.

சிங்களவர்கள் அல்லாத சில உயர்தர அதிகாரிகள் தந்திச் சேவை விஸ்தரிப்பு என்ற பெயரில் செய்துள்ள தில்லுமுல்லுகளின் காரணமாக அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய லட்சக்கணக்கான முதல் கிடைக்காமல் போய்விட்டதாகவும் இவர்கள் அமைச்சருக்குத் தெரிவித்திருக்கிறார்களாம்.

கல்கிஸைப் பகுதியில் 1500 பேரும், நுகேகொடைப் பகுதியில் 1800 பேருக்குமதிகமாகவும் ஜாஎல பகுதியில் 1400க்கு மதிகமானவர்களும் டெலிபோன் வசதிகேட்டுப் பதிவு செய்து கொண்டிருக்கும் பொழுது: இவர்களுக்கு டெலிபோன்கள் இணைத்துக் கொடுக்காமல் யாழ்ப்பாணப் பகுதியில் 500 பேருக்கு டெலிபோன்கள் போட்டுக் கொடுத்திருக்கிறார்களாம்.

— —

## பாடசாலை வளர்ச்சிக்கு பெற்றோரின் ஆதரவுவேண்டும்

பருத்தித்துறை, ஞாயிறு

ஒருஸ்தாபனம் வளர்ச்சியடையவேண்டுமாயின் கடந்த காலங்களில் ஏற்பட்ட தவறுகள், குறைபாடுகள் ஆகியவற்றைக் கணித்து, எதிர்காலத்தில் அவற்றை தவிர்த்து, சகலரின் ஒத்துழைப்புடன் இயங்கவேண்டியது அவசியம். பெற்றோரின் ஆதரவும் ஒத்துழைப்புமின்றி ஒருபாடசாலை முன்னேற்றமடைய முடியாது எமது உத்தேசத்திட்டங்களை வெற்றிகரமாகச் செயல் படுத்த முடியாது

இவ்வாறு நேற்று முன்தினம் வடமராட்சி இந்து மகளிர்கல்லூரி அதிபர் செல்வி கே, சரவணமுத்து மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடந்த பெற்றோர் ஆசிரியர்சங்க வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிப் பேசுகையிற் கூறினார்,

மேற்படி சங்கச் செயலாளர் திரு எம் இராமக்கிருஷ்ணன் பேசினார்.

# சதி செய்யும் அதிகாரிகள் தப்ப மாட்டார்களாம்

வஸ்கடுவ, ஞாயிறு

முன்னைய அரசாங்கம் ஆசிரியர்களை மிகமோசமான முறையில் பழிவாங்கியது. ஆனால் இந்த மக்கள் அரசாங்கம் ஒருபோதும் அவ்வாறு செய்யாது என்றாலும் அரசாங்கம் எடுக்கும் முன்னேற்ற நடவடிக்கைகளைக் குட்டிச் சுவராக்குவதற்கு முயற்சி எடுக்கும் அதிகாரிகள் விஷயத்தில் கொஞ்சமும் அனுதாபம் காட்டப்படமாட்டாதுஎன்றுதம்மை வரவேற்பதற்காக நடத்தப்பட்ட கூட்டமொன்றில் பேசுகையில் களுத்துறை எம். பி திரு சம்லி குணவர்தன கூறினார்.

எமது சோஷலிச நடவடிக்கைகளுக்கு மக்கள் பெருமளவில் ஆதரவு அளித்து வருகிறார்கள். எவ்வளவு குறைபாடுகள் இருந்தாலும் மக்கள் பிரச்னைகளை தீர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் இந்த முறை தேர்தலின் போது எமது சோஷலிச திட்டங்களின் முழு விபரங்களையும் மக்கள் முன்வைத்தோம், சோஷலிஸத்தை இந்த நாட்டில் நிலைநிறுத்துவதற்காகவே மக்கள் இம்முறை எங்களில் 115 பேரை ஆட்சிமன்றத்துக்கு அனுப்பிவைத்தார்கள்.

# கொல்லை வழியாகப்பதவிக்கு வந்தவர்களுக்கு ஆபத்து

## பண்டாரவளை எம். பி. எச்சரிக்கை

தியத்தலாவ, திங்கள்

''முன்னைய அரசாங்கத்துக்கு வால்பிடித்தவர்களுக்கு அமைச்சர்களின் கடிதத் துண்டுகளின் மீது வேலைகள் கொடுக்கப்பட்டன. அப்படி வேலைகளில் அமர்ந்தவர்களில் பலரும் தகுதியற்றவர்களாய் இருக்கிறார்கள் இதுபற்றி கூட்டணிஅரசாங்கம் ஆராய்ந்துகொண்டிருக்கின்றது

இது முடிந்ததும் கொல்லை வழியாக வேலைகளில் புகுந்தவர்கள் பலரும் வெளியே இழுத்துப் போடப்படுவார்கள''

இவ்வாறு பண்டாரவளை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு ஆர். எம். அப்புஹாமி கூறினார். தம்மைவரவேற்பதற்காக நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கடந்த அரசாங்கத்தின் ஊழல் நிறைந்த நிர்வாகம் காரணமாக அனேக கூட்டுத்தாபனங்களிலும், காரியாலயங்களிலும் அரசுக்கு பெரிதும் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது.

இ. போ. ச.வில் ஏற்பட்டிருந்த நிலைமை மிகப்பயங்கரமாக விருந்தது, இவைகளை மீண்டும் திருத்தி அமைப்பதற்கு நிறையகாலம் செலவாகின்றது. என்று திரு. அப்புஹாமி குறிப்பிட்டார்.

தேர்தல் காலத்தில் முதலாளிவர்க்க பத்திரிகைகள் எங்களுக்கு எதிராகப் பிரமாண்டமான பிரசாரங்களை நடத்திக்கொண்டிருந்தன. ஆனால் அவை இப்பொழுது வேறு முகமூடி போட்டுக்கொண்டுள்ளன என்றார் அவர்.

## தமிழரசு ஆட்சிமன்ற குழுக்கூட்டம்

கொழும்பு, திங்கள்

ஆட்சிமன்றத்தில் தனிநபர் பிரேரணை கொண்டு வருவதுபற்றி நேற்றுகூடிய தமிழரசுக்கட்சி ஆட்சிமன்றக்குழு ஆராய்ந்தது.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் அவரது இல்லத்தில் இக்கூட்டம் நடந்தது.

தமிழரசுக்கட்சி எதிர்க்கட்சியில் சுதந்திரமாக இயங்குவதென தீர்மானிக்கப்பட்டிருப்பதால், எப்போதும் ஆட்சிமன்றத்தில் சமூகமளிப்பதன் அவசியம் பற்றியும் ஆராயப்பட்டது.

ஆலயப் பிரவேசம்

## நாளை கொழும்பில் மகாநாடு

கொழும்பு, திங்கள்

மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக பிரதமர் ஸ்ரீமாவோ தலைமையில் வடபகுதிப் பிரமுகர்களைக் கொண்ட மகாநாடொன்று நாளை கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

காங்கேசன்துறை பட்டின சபைத் தலைவர் திரு க ஜெயபாலசிங்கம், மல்லாகம் கிராமச்சபைத் தலைவர் திரு வ பொன்னம்பலம், தெல்லிப்பளை கிராமச்சபைத் தலைவர் திரு சிதம்பரநாதன் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொள்வார்களென அறியப்படுகிறது.

2-வது ஆண்டு நிறைவு விழா!

வெஸ்லி சினிமா

(மானிப்பாய்)

எமது 2-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இன்று முதல்

ரவிச்சந்திரன் (இரு வேடங்களில்)

ஜெயலலிதா - ஜோதிலட்சுமி

நடித்த

பணக்காரப்பிள்ளை

(புதிய வெளியீடு)

ரசிகப் பெருமக்கள் கடந்த காலங்களில் எமக்கு அளித்த ஆதரவுக்கு எமது அன்புகலந்த நன்றியை தெரிவிக்கின்றோம், தொடர்ந்து தங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம். — நிர்வாகிகள்

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜுலை மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org